Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 2, 2021

வெள்ளிக்கிழமை, 2 செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர் 091 | பக்கம்:09 | நகரப்பதிப்பு★ | Free

ஐ.எம்.எப்பினால் இலங்கைக்கு

2.9 பில்லியன் டொலர் நிதியுதவி

இருதரப்பு கடன் வழங்குநர்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் வலியுறுத்தினர்

ஆர்.யசி

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்) அதிகாரிகளுக்கும் இலங்கைக்கும் இடையில் பொருளாதார கொள்கைகள் தொடர்பான பணியாளர் மட்டத்திலான உடன்பாட்டை எட்டியுள்ளதாகவும்,

தொடர்ச்சி P2

புகைப்பொருள்களின் விலைகள் எகிறின



சகல வகையான புகைப்பொருட்களின் விலைகளும் நேற்று (01) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

3 ரூபாய் முதல், 5ரூபாய், 10 ரூபாய் மற்றும் 15 ரூபாய் என்ற அடிப்படையில் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதிகரிக்கப்பட்ட வற்வரி நேற்று (01) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் புகைப்பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக வற்வரி 12 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜபக்ஷர்களை நாட்டில் நெருப்பை பற்ற வைத்தனர்

பாரதீஸ்

நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்தபோது செய்தவற்றைக் கூட ஜனாதிபதியான பின்னர் ரணிலால் செய்ய முடியவில்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். உள்நாட்டு விவகாரங்களுக்காக சர்வதேசத்துக்கு செல்ல விரும்பவில்லை. ஆனால் சர்வதேசத்துக்கு செல்லும் நிலைமையை அரசாங்கம் உருவாக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

நாட்டின் உண்மையான நிலைமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நேற்று (31) தெளிவுப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

ஜெயராஜ் படுகொலை: இருவர் விடுவிப்பு

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட 16 பேரை கொலை செய்ததாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த இருவர், வழக்கில் இருந்து நேற்று (01) விடுவிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் என கூறப்படும் 'மொரிஸ்' என்றழைக்கப்படுகின்ற செல்வராஜா கிருபாகரன், கம்பஹாவின் அப்போதைய பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் குரே ஆகியோரே விடுவிக்கப்ப ட்டுள்ளார்.

கம்பஹா நீதிமன்ற நீதவான் மாபா பண்டார வழக்கின் தீர்ப்பை நேற்று(01) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

ஆரம்பம் கடினமானது

பின்தொடர்ந்தால் எம்மால் முன்னேற முடியும் என்கிறார் ஜனாதிபதி

கடன் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது மற்றும் அனைத்து சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (01) நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் இது முக்கியமான படிக்கல்லாகும் . வீழ்ச்சியில் இருந்து மீள்வது, கடனை திருப்பிச் செலுத்த அவகாசம் பெறுவது மட்டுமன்றி, சமூக துறைகளைப் பாதுகாப்பது, வாழ்க்கை முறையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவது என்பன முக்கியமாகும். அதனைவிட தற்போதைய நிலைமையில் பின்னடைவு ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதும் முக்கியமானதாகும் என தெரிவித்துள்ள அவர்,

தொடர்ச்சி P2

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த

வயாவிளான் கோவில் மஹா கும்பாபிஷேகம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - வயாவிளான் தெற்கு ஞான வைரவர் கோவில் மஹா கும்பாபிஷேகம், நேற்று வியாழக்கிழமை (01) காலை நடைபெற்றது.

தொடர்ச்சி P2

அடுத்ததாக இருதரப்பு பேச்சு

ஐ.எம்.எப் இணக்கப்பாடு ஆரம்பம் மட்டுமே என்கிறார் பிரதமர்

பா. நிரோஸ்

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஸ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இருதரப்பு உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை அடுத்ததாக ஆரம்பிக்கப்பட வுள்ளதாகவும், இதன்படி இருதரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்தி கூட்டாளர்களினால் கடன் தொகைகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் எனவும் கூறினார்.

தொடர்ச்சி P2

இறுதியில் வருகிறார்

மாலைத்தீவுக்கு தப்பியோடி, சிங்கபூரில் தற்காலிகமாக தங்கியிருந்த நிலையில், தாய்லாந்தில் அடைக்கலம் புகுந்திருக்கும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இவ்வார இறுதியில் நாடு திரும்பவுள்ளார் என அறியமுடிகின்றது.

நாளை (செப்டெம்பர் 3) சனிக்கிழமை நாடு திரும்புவார் என தகவல்கள் கசிந்துள்ள போதிலும், உத்தியோகபூர்வமான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இந்நிலையில், கொழும்பு-7. அதிபிரமுகர்கள் வாழும் பகுதியில் வீடொன்று தயார்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், மிரிஹானையில் உள்ள அவரது தனிப்பட்ட வாசஸ்தலத்தின் பாதுகாப்பு பன்மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

65 குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டன

ஷெஹான் சேனவீரத்ன

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டி -பூஜாபிட்டிய பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆபத்தான இடங்களிலிருந்து 65 குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் சுதுஹும்பொல, பூவெலிக்கடை ஆகிய பகுதிகளில் ஆபத்தான இடங்கள் என கண்டறியப்பட்டுள்ள இடங்களிலிருந்து பல குடும்பங்களை வெளியேற்றுவது தொடர்பில், மேலதிக கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாதுகாப்பற்ற இடங்களில் வசிக்கும் குடும்பங்களை அகற்றுவதற்காக அரசாங்கம் வழங்கும் நட்டஈடானது, காணி வாங்குவதற்கும் புதிய வீடு கட்டுவதற்கும் போதுமான தொகையாக இல்லையெ மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

பொன்னாலை – பருத்தித்துறை வீதி 24 மணிநேரமும் திறப்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், கீரிமலை ஊடான பொன்னாலை - பருத்தித்துறை வீதியை மக்கள் பாவனைக்காக முற்றாக திறந்து விட நடவடிக்கை எடுத்துள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் குறித்த வீதி கடந்த 30 வருட காலமாக காணப்பட்ட நிலையில், கடந்த நல்லாட்சி கால பகுதியில் அப்பகுதி மக்கள் மீள் குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டு, வீதியும் திறந்து விடப்பட்டது.

தொடர்ச்சி P2

இந்தியா இல்லையென்றால்

கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேர்ந்திருக்கும்

பிராந்திய பாதுகாப்புக்கு இந்தியாவே நங்கூரமாக உள்ளதாகவும், சீன ஆராய்ச்சிக் கப்பல் அண்மையில் ஹம்பாந்தோட்டைக்கு விஜயம் செய்தமை போன்ற பிரச்சினைகளை கையாள்வதற்காக புது டெல்லி மற்றும் கொழும்பு இணைந்த கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனவும் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் அதிகரித்த பதற்றங்கள் மற்றும் போட்டியின் பின்னணியில், இலங்கை தனது சொந்த அபிவிருத்தி மற்றும் அதன் இறையாண்மையை மேற்கொள்வதில் கவனம் செலுத்தினாலும், சகல தரப்புடனும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதையே விரும்புவதாகவும்,எங்கள் இறையாண்மைக்கு எந்த வகையிலும் அச்சுறுத்தலை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

மேலதிக உதவிகளையும் வழங்க எதிர்பார்க்கிறோம்

சர்வதேச நாணய நிதியம் மூலம் இலங்கைக்கு வழங்கவுள்ள 2.9 பில்லியன் டொலருக்கு மேலதிகமாக மேலும் பாரிய தொகையை வழங்க எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதிய தூதுக்குழுவின் பிரதி தலைவர் மசாஹிரோ நொசாக்கி தெரிவித்தார். நாணய நிதியத்தின் இருதரப்பு மற்றும் பல்தரப்பு பங்காளிகள் ஊடாக வழங்கப்படும் எனவும் கூறினார். பொது நிதி முகாமைத்துவத்தில் கூடிய கவனம் செலுத்தியாக வேண்டும், குறிப்பாக ஊழல் அற்ற வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குதல் அரசாங்கத்தின் கட்டாய ப்பணியாக அமைய வேண்டும்.

தொடர்ச்சி P2

பணவீக்கம் 64.3% அதிகரிப்பு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2022 ஜூலையில் 60.8 சதவீதத்திலிருந்து 2022 ஓகஸ்ட் மாதத்தில் 64.3 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஆண்டிற்கு ஆண்டு பண வீக்கத்தில் இவ்வதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் மாதாந்த அதிகரிப்புக்களால் உயர்வடைந்துள்ளது எனவும்,

தொடர்ச்சி P2

துப்பாக்கிச் சூட்டில் பெண் பலி

கேகாலை - களுகல மாவத்தை பகுதியில் நேற்று (01) நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

களுகல்ல மாவத்தையிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தின் ஊழியரான, கேகாலை ஹம்புதுகல பகுதியைச் சேர்ந்த 36 வயதான பெண்ணொருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன், சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த சில வாரங்களில் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

2.9 பில்லியன் டொலர் நிதியுதவி

அதற்கமைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலரினை வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழு இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக்கொண்டுள்ளதாகவும் ஐ.எம்.எப் அறிவித்துள்ளது.

48 மாதகால ஏற்பாட்டுடன் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட நிதி உதவியை பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் ஐ.எம்.எப் கலந்துரையாடல் சபையின் தலைவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று (1) ஐ.எம்.எப் அதிகாரிகள் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இலங்கையின் கடன் நிலைமைகள் ஸ்திரமற்ற நிலையில் உள்ளதை கணித்துள்ள காரணத்தினால், கடன் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த கடன் வழங்குநர்களின் ஒத்துழைப்பு அவசியமானது. அதற்கும் ஐ.எம்.எப் நிறைவேற்று குழுவின் அனுமதி அவசியமாகும். இப்போது காணப்படும் கடன் நெருக்கடியை தவிர்க்க இருதரப்பு கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு மேலதிக கடன் சலுகைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றார்.

இலங்கையின் கடன் வழங்குநர்கள் இந்த சூழ்நிலையில் இலங்கைக்கு கடன் சலுகைகளை பெற்றுக்கொடுக்காது போனால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மேலும் வலுப்பெறும். எனவே, சகல கடன் வழங்குநர்களும் இலங்கைக்கு சலுகைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்பொது செய்துகொள்ளப்பட்டுள்ள பணியாளர் மட்டத்திலான உடன்படிக்கை இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்கான பயணத்தில் நெருக்கடிகளை தவிர்க்கும் ஆரம்பம் மட்டுமேயாகும். அதற்கு தேவையான மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர். இதே பாதையில் தொடர்ந்தும் பயணிக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். சமூகத்தில் சகல மட்டத்திலும் உள்ளவர்களை பாதுகாக்க வேண்டியதும் அவசியமானதாகும் எனக் கூறிய அவர், இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை கடினமான பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முக்கியமானது என்றார்.

இப்போது செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையை உறுதிப்படுத்த அதிகாரிகள் முழுமையாக எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து நம்பிக்கையை ஏற்படுத்துவது அவசியம். இருதரப்பு, பலதரப்பு கடன் வழங்குநர்கள் வழங்கும் சான்றும் அவசியமானது. மீள் கட்டமைப்பு வேலைத்திட்டம் இறுக்கமான கொள்கைக்கு அமையவே உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

குறிப்பாக அரச வருமானத்தை அதிகரித்தல், எரிபொருள் மற்றும் மின்சார உற்பத்திக்கான நிதியை பெற்றுக்கொண்டு அரச துறை எதிர்கொண்டுள்ள நெருக்கடியை குறைத்தல், மத்திய வங்கியின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தல், வெளிநாட்டு கையிருப்பை அதிகரித்து நிதி ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நெருக்கடியை குறைப்பதற்கான பலமான சமூக கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் ஊழலை குறைப்பதன் மூலமாக நிலையான பொருளாதார அபிவிருத்தியை நோக்கி பயணித்தல் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

ராஜபக்ஷர்களே நாட்டில் நெருப்பை பற்ற வைத்தனர்

ராஜபக்ஷர்களே நாட்டில் நெருப்பை பற்ற வைத்தனர். அவர்களது ஊழல் மிக்க ஆட்சியே நாட்டை இந்நிலைமைக்கு தள்ளியது எனவும் தெரிவித்தார்.

இடைக்கால வரவு-செலவு திட்ட உரையை ஜனாதிபதிக்கு யார் எழுதிக்கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை. கர்ப்பிணிப் பெண்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாகவும் அதற்கு மேலதிகமாக 2500 ரூபாயை வழங்கப்போவதாகவும் ஜனாதிபதி கூறுகிறார். உண்மையில் 20ஆயிரம் ரூபாய் தற்போது வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என பிரதமர் தினேஸ் குணவர்தன அழைப்பு விடுத்துள்ளார். அடுத்த சில வாரங்களுக்கும் பிரதமர் ஆசனத்தில் தினேஸ் நீடித்திருக்க வேண்டுமென தான் பிரார்த்தனை செய்வதாகவும் தெரிவித்தார். கோப், கோபா குழுக்கள், துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் தலைவர் பதவிகளைக்கூட எதிர்க்கட்சி வழங்காத அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுப்பது நகைப்புக்குரியது எனவும் தெரிவித்தார்.

ஆளுந்தரப்பில் உள்ள 20 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை அரசாங்கம் செலுத்தாது இருப்பதால் அப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை அரசாங்கம் கொடுக்க வேண்டும் எனவும் கேலி செய்த சஜித், ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுப்படுத்த முயல வேண்டாம். பணத்துக்கும் பதவிக்கும் விலை போகிறவர்கள் எங்களிடம் இல்லை என்றார்.

ஜெயராஜ் படுகொலை: இருவர் விடுவிப்பு

வெலிவேரிய காந்தி விளையாட்டு அரங்குக்கு அருகில் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 06ஆம் திகதியன்று நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே உள்ளிட்ட 16 பேர் கொலை செய்யப்பட்டனர். அத்துடன் பலர் காயமடைந்தனர்.

அதன்பின்னர் கைது செய்யப்பட்ட மேற்படி இவ்விருவருக்கு எதிராக, 16 பேரை படுகொலைச் செய்தமை மற்றும் 84 பேரை படுகொலைச் செய்வதற்கு முயற்சித்தமை, படுகொலைக்குக் சூழ்ச்சி செய்தமை உள்ளிட்ட 31 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பம் கடுமானது

சமூகக் கட்டமைப்பை பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய குழுக்களைப் பாதுகாத்தல் என்பவற்றை முன்னெடுக்கும் அதேநேரம் போட்டித் தன்மை மிகுந்த ஏற்றுமதியை அடிப்டையாகக்கொண்ட தொழில் துறையாக நாட்டை மேம்படுத்துவதை புதிய பொருளாதார யுகமாக கருதுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன் ஆரம்பம் கடிமானதாக இருக்கும், ஆனால் நாம் அதனையே பின்தொடர்ந்தால் எம்மால் இன்னும் முன்னேற முடியும். இப்போதைக்கு எது தேவையோ அதுவே எமது அர்ப்பணிப்பாக இருத்தல் வேண்டும். எனினும் இங்கு நாம் எமது இலக்கை அடைவதை மட்டும் குறிக்கோளாக கொண்டிராமல் அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும், என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். இலங்கை தனது கடன்களைக் குறைப்பதற்கும், முடிந்தால் கடன்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் இது ஒரு தொடக்கமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

வயாவிளான் கோவில் மஹா கும்பாபிஷேகம்

இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பகுதியில் இருந்த மக்கள் வெளியேறிய நிலையில், இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் 28 வருட காலமாக இருந்த கோயிலை விடுக்குமாறு பல தரப்பினரிடமும் மக்கள் கோரிக்கைகள் விடுத்து வந்தனர்.

இந்நிலையில், 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி கோவில் பகுதியை இராணுவத்தினர் விடுவித்து, தமது உயர்பாதுகாப்பு வலய வேலியை பின் நகர்த்தினர்.

அதனை அடுத்து முற்றாக சேதமடைந்த கோவிலை மீள் நிர்மாணம் செய்வதற்கு கோவில் பரிபாலன சபை முயற்சிகளை முன்னெடுத்து , உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்தோர்களின் நிதி பங்களிப்பு, ஆதரவுடன் கோவிலை இராஜ கோபுரத்துடன் புனர்நிர்மாணம் செய்தனர்.

இந்நிலையில், நேற்று (01) காலை 07.09 மணி முதல் 09.04 மணி வரையிலான கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தின் போது கடும் மழை பொழிந்த போதிலும் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு, வைரவ பெருமானை வணங்கி, அருளாசியை பெற்றுக்கொண்டனர்.

அடுத்ததாக இருதரப்பு பேச்சு

பாராளுமன்றத்தில் நேற்று (1) நடைபெற்ற இடைக்கால வரவு -செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பு குறித்த தகவல்களை வெளியிடுகையிலேயே பிரதமர் தினேஸ் குணவர்தன இதனை தெரிவித்தார்.

இலங்கை முகம்கொடுத்துள்ள பாரிய நிதி நெருக்கடியில் இருந்து மேலெழுவதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சியின் போது, இது மிகவும் முக்கியமானதாக அமையும். அதிகாரிகள் மட்டத்தில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பின்னர், இலங்கை கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டுக்குள் நிலைபேரான கடனை பெற்றுக்கொள்வதற்காக இலங்கைக்கு கடன் வழங்குபர்களினால் உறுதி அவசியமாகும். இதன்படி சர்வதேச நாணய நிலையத்தின் நிறைவேற்று சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு அவசியமாகும் எனக் கூறிய அவர்,

இருதரப்பு உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை அடுத்ததாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன்படி இருதரப்பு மற்றும் பலதரப்பு அபிவிருத்தி கூட்டாளர்களினால் கடன் தொகைகளை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும். அதற்குள் எங்களின் அத்தியாவசிய நடவடிக்கைகளுக்காக உதவிகள் கிடைக்கும். இதன்மூலம் பொருளாதாரத்தையும் மக்கள் வாழ்க்கைத் தரத்தையும் படிப்படியாக வழமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

இன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடு எங்களின் முயற்சியின் சிறந்த முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் விடயமாகும். எனினும் இது ஆரம்பம் மட்டுமே என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். இன்னும் நீண்ட பயணத்தை நாங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றார்.

கடுமையான நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேர்ந்திருக்கும்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க தெளிவான உரையாடல் அவசியம் எனவும், குறிப்பாக சீன கப்பல் வருகைகள் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. இப்போதைய சர்ச்சைகளை தாண்டிச் செல்ல வேண்டுமென கருதுவதாகவும், மேலும் இதுபோன்ற சம்பவம் அல்லது பாதுகாப்பு பற்றிய தவறான புரிதல் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்ய சில வகையான கட்டமைப்பை உருவாக்க வேண்டும்,என்று எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த எட்டு அல்லது ஒன்பது மாதங்களில் ஒவ்வொரு நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் இந்தியா உண்மையில் எங்களுக்கு ஆதரவளித்துள்ளது என்பதை நினைவுபடுத்து வதாகவும், இந்தியா இல்லையென்றால், இலங்கைக்கு கடுமையான பிரச்சினை இருந்திருக்கும், ஏனென்றால் எரிபொருள் மற்றும் உணவுத் தட்டுப்பாடு வந்த வேளையில், இந்தியா எங்களுக்கு ஆதரவளித்தது. எனவே, நாம் இந்தியாவுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், என்று அவர் தெரிவித்துள்ளார்.

65 குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டன

எனவே, இக்குடும்பங்களுக்கு தற்காலிக தீர்வை வழங்குவதற்கு பதிலாக, நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிரந்தரத் தீர்வை வழங்குவதே முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலதிக உதவிகளையும் வழங்க எதிர்பார்க்கிறோம்

அதற்கமைய உறுதியான ஊழல் தடுப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவதன் மூலம் ஊழல் பாதிப்புகளை குறைத்தல், வலுவான ஊழலுக்கு எதிரான சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஐ.எம்.எப் தொழில்நுட்ப உதவியால் ஆதரிக்கப்படும் ஆழமான ஆளுகையை கண்டறிதல் அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வரிக்கொள்கையில் மாற்றத்தை உருவாக்க வேண்டும், இப்போதும் குறைவான மட்டத்திலேயே வரி அறவீடுகள் காணப்படுகின்றது. உயர் வருமானத்தை பெறுவோருக்கான வரி விதிப்புகளை அதிகரிக்க வேண்டும். முறையான கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

பணவீக்கம் 64.3% அதிகரிப்பு

.அதற்கமைய, உணவுப் பணவீக்கம் 2022 ஜூலையில் 90.9 சதவீதத்திலிருந்து 2022 ஓகஸ்ட் மாதத்தில் 93.7 சதவீதத்திற்கு அதிகரித்த அதேவேளை, உணவல்லாப் பணவீக்கம் ஜூலையில் 46.5 சதவீதத்திலிருந்து 2022 ஓகஸ்ட் மாதத்தில் 50.2 சதவீதத்திற்கு அதிகரித்தது என சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம்,ஓகஸ்ட் மாதத்தில் 2.45 சதவீதமாகப் பதிவாகியது. இதற்கு, முறையே 0.83 சதவீதமாகவும் 1.62 சதவீதமாகவும் காணப்பட்ட உணவு மற்றும் உணவல்லா வகைகள் இரண்டினதும் பொருட்களில் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்புக்கள் காரணமாக அமைந்துள்ளதாக மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

பொன்னாலை – பருத்தித்துறை வீதி 24 மணிநேரமும் திறப்பு

எனினும், அதிகாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையிலையே குறித்த வீதியின் ஊடாக மக்கள் போக்குவரத்து செய்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்து இருந்தனர்.

இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் மயிலிட்டி பகுதியில் உள்ள இராணுவ பொலிஸ் காவலரனின் வீதி தடை போடப்பட்டு, மக்கள் போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

குறித்த வீதியை முழுமையாக மக்கள் பாவனைக்காக திறந்து விடுமாறு நீண்ட காலமாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், நேற்று (01) முதல் 24 மணி நேரமும் குறித்த வீதி திறந்து இருக்கும் என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் காட்டு யானைகள் அட்டகாசம்;

பாடசாலை,சமூர்த்தி வங்கியின் சுற்றுபுற வேலிகள் சேதம்

எம். எஸ். எம். அப்ராஸ்

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கல்முனை பிரதேசத்தில் அமைக்கப்பட்ட கிறீன்ட் பீல்ட் தொடர் மாடி மக்கள் குடியிருப்பு பகுதியில் காட்டு யானைகள் உள்நுழைந்து அட்டகாசம் செய்துள்ளன.

இதனால், கல்முனை சமூர்த்தி வங்கி சுற்றுபுற வேலியின் ஒரு பகுதியும் மற்றும் கல்முனை ரோயல் வித்தியாலத்தின் சுற்றுபுற வேலியின் ஒரு பகுதியும் சேதமாகியுள்ளது.

பொது மக்கள் குடியிருப்பு பகுதிக்கு அயலுள்ள வயல் வெளிகளில் கூட்டமாக சஞ்சரிக்கும் காட்டு யானைகள், இரவு வேளைகளில் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து. அதிகாலை 2.30 மணியளவில் சேதம் விளைவித்ததாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் மிகவும் அச்ச நிலையில் தாம் வசித்து வருவதாக பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கல்முனை மாநகர சபையினால் சேமிக்கப்படும் திண்மக்கழிவுகள் கல்முனை கீறின் பில்ட் குடியிருப்பு பகுதியை அண்மித்த வயல் வெளி பகுதியில் மொத்தமாக கொட்டப்பட்டு, சேமிக்கப்பட்டு அகற்றல் நடவடிக்கை இடம்பெற்று வரும் நிலையில் குறித்த திண்மக்கழிவினை உண்பதற்காக காட்டு யானைகள் வருகை தருவதாக குடியிருப்பாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

யானைகள், மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைவதை உடனடியாக கட்டுப்படுத்துமாறு உரிய அதிகாரிகள் மற்றும் பிரதேச அரசியல்வாதிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

பிச்சையெடுத்தாவது உணவு வழங்க நடவடிக்கை எடுப்பேன்

மாணவர்களுக்கு போசனைகளை அதிகரித்து கல்வி வளர்ச்சிக்கு என்ன செய்ய முடியுமோ அதற்காக முடிந்தளவுக்கு பங்களிப்பை வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றேன். பிச்சையெடுத்தாவது பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்க நடவடிக்கை எடுப்பேன் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அமைச்சின் அறிவிப்பை முன்வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவினால் வழங்கப்பட்ட உணவு பொருட்கள் தொடர்பில் இந்த பாராளுமன்றத்தில் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இப்போது மட்டுல்ல நாங்கள் பாடசாலை செல்லும் காலத்திலும் அமெரிக்காவினால் வழங்கிய மாவை கொண்ட பிஸ்கட்கள் தயாரிக்கப்பட்ட வழங்கப்பட்டிருந்தன. இந்நிலையில் யுனிசெப் போன்ற அமைப்புகள் பிள்ளைகளின் போசனை மட்டம் தொடர்பில் ஆராய்ந்து போசனைகளை அதிகரிப்பதற்காக வேலைத் திட்டங்களை முன்வைக்கின்றன. இதன்படி ஏதேனும் உதவிகள் கிடைத்தால் அவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும். அமெரிக்காவும் உதவிகளை வழங்கியுள்ளன. அவற்றை பொறுப்பேற்றேன். இதனை வேறு வகையில் சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனால் நான் பிச்சையெடுத்தாவது பிள்ளைகளுக்கு உணவை வழங்க முடியுமென்றால் அதனை செய்வேன். மாணவர்களுக்கு போசனைகளை அதிகரித்து கல்வி வளர்ச்சிக்கு என்ன செய்ய முடியுமோ அதற்காக முடிந்தளவுக்கு பங்களிப்பை வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்றார்.

சீன உர கப்பலுக்கு செலுத்திய

6.9 மில்லியன் டொலரை மீளப்பெறும் முயற்சி தோல்வி

சீன உர கப்பலுக்கு செலுத்திய 6.9 மில்லியன் டொலரை மீள பெறுவதற்கும் அல்லது அதற்கு பதிலாக இரசாயன உரத்தை பெற்றுக்கொள்வதற்கும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. உர விவகாரம் தொடர்பில் சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ள சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்தார்.

சீன உர கப்பலுக்கு செலுத்திய 6.9 மில்லியன் டொலர் தொடர்பில் பலதரப்பட்ட விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பில் ஆராய விவசாயத்துறை அமைச்சின் தலைமையில் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் அமைச்சரவை குழு நியமிக்கப்பட்டுள்ளது எனக் கூறிய அவர், குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை பாராளுமன்றிற்கு முழுமையாக சமர்ப்பிப்பேன் என்றார்.

சீன உர கப்பலுக்கு செலுத்திய கட்டணம் மற்றும் அதனுடனான முரண்பாடுகள் தொடர்பில் அடுத்தக்கட்ட சட்ட நடவடிக்கையினை எடுக்க சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளோம். இந்த பிரச்சினைக்கு யார் காரணம் என்பதை தற்போது குறிப்பிட முடியாது. குழுவின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

நிவாரணங்கள்

உரியவகையில் கிடைக்க வேண்டும்

மலையகம் உள்ளிட்ட நாடெங்கிழும் வாழும் குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் நிவாரணங்கள் உரிய வகையில் கிடைக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார். இந்த நிவாரணங்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றது என்பதை நாம் தொடர்ந்து கண்காணிப்போம் எனவும் தெரிவித்தார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எங்களது அரசாங்கத்தில் வழக்கு தொடர்ந்தோம். ஆனால் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் ஆணைக்குழு ஒன்றை அமைத்து அந்த அறிக்கையை அடிப்படையாக வைத்து, சட்டமா அதிபர் அந்த ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளில் இருந்து விலகிக்கொண்டார். இதனால் வழக்கு தொடரப்பட்டிருந்தவர்களும் விடுதலையானார்கள் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை மக்களோடு இருப்பதாகவும், நாட்டில் அரசியல் ஸ்தீரத்தன்மை தொடர்பில் அவர்கள் பேசியுள்ளார்கள். அரசியல் ஸ்தீரத்தன்மை இல்லாது சர்வதேசம் உதவாது என்பதையே அவர்கள் கூறுகிறார்கள். இது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம் எனவும் தெரிவித்தார்.

மத்திய வங்கியும் நிதிச்சபையும் பொறுப்பற்று செயற்பட்டுள்ளன

மறுசீரமைப்பு என்ற பெயரில் அரச நிறுவனங்களை தனியாருக்கு வழங்குவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். அரச பொறிமுறைக்குள் ஊழிர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையிலேயே அதனை செய்யவேண்டும். அத்துடன் நாடு வங்குராத்து நிலைக்கு செல்லும் வரைக்கும் மத்திய வங்கியும் நிதிச்சபையும் பொறுப்பற்று செயற்பட்டுள்ளன என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

அரச நிதி தொடர்பான அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கின்றது. அதனால் இது தொடர்பில் அறிந்துகொள்ளும் அதிகாரம் எமக்கு இருக்கின்றது. பொருளாதாரம் வீழ்ச்சியடையும்போது அதுதொடர்பில் அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்தி அறிவுறுத்த வேண்டியது மத்திய வங்கியின் பொறுப்பாகும். அத்துடன் நாடு வங்குரோத்து அடைந்திருப்பதை முன்னாள் ஜனாதிபதியோ பிரதமராகே மத்திய வங்கியோ தெரிவிக்கவில்லை. ரணில் விக்ரமசிங்க பிரதமரான பின்னர் ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தார். இதன்போதே நாங்களும் அதுதொடர்பில் அறிந்துகொண்டோம். அரசாங்கத்துக்கு வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து அன்னிய செலாவணியை பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. அரசாங்கம் தொடர்பில் நம்பிக்கை இல்லாமையே இதற்கு காரணமாகும். யுத்தக் காலத்திலும் வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து மாதத்துக்கு 500மில்லியன் டொலர்வரை பெற்றுக்கொள்ள முடியுமாகியது.

அரசியல் மறுசீரமைப்பு, பொருளாதார மறுசீரமைப்பு மேற்கொள்ளவேண்டும் என்றே சர்வதேசம் தெரிவித்து வருகின்றது. அரசியல் மறுசீரமைப்புக்காக 6 மாதங்களுக்கு இடைக்கால அரசாங்கம் அமைப்பதாகவே தெரிவித்திருந்தது. ஆனால் தற்போது அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டிருக்கின்றது. பொருளாதார மறுசீரமைப்பும் இடம்பெறுவதாக தெரியவில்லை. எனவே எமது நாடு முன்னுக்கு செல்லவேண்டும் என்றால் ஏதாவது ஒரு தேர்தலுக்கு சென்று மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ளவேண்டும் என்றார்.

ரணிலின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் தெரிகின்றன

இதுவரை காலமும் ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுவந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது சிங்களத்தில் கையெழுத்திடுவதன் மூலம் அவரின் நிலைப்பாடுகளும் மாறி வருவது தெளிவாகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கஷ்டப்படுகின்ற விவசாயிக்கும் கடற்தொழிலாளிக்கும் இதுவரைக்கும் எந்த நிவாரணமும் கொடுக்கப்படவில்லை. இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் கூட மண்ணெண்ணெய் பாவிப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமென்ற முன்மொழிவு இருக்கின்றது. ஆனால் ஒதுக்கீட்டில் இந்த நிவாரணத்துக்காக ஒரு சதம் கூட ஒதுக்கப்படவில்லை.

மத்தியவர்க்கம் மற்றும் அதற்கு மேற்பட்ட வர்க்கத்தை அமைதியாக்கும் அரசின் நோக்கத்தையே இது காட்டுகின்றது. மத்தியவர்க்கத்தின் கீழ் உள்ளவர்களையே அரசு பார்க்க வேண்டும், ஆனால் இங்கு மத்தியவர்க்கம் மற்றும் அதற்கு மேற்பட்ட வர்க்கத்தை அமைதியாக்கி சமாளிக்க அரசு முற்பட்டுள்ளது.

அண்மைய நாட்களாக துப்பாக்கி சூட்டு மரணங்கள் அதிகரித்துள்ளன. அந்த மரணங்களை தடுக்கவோ சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யவோ பொலிஸ் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் மக்களின், மாணவர்களின் போராட்டங்களி அடக்கவே பொலிஸ் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு இடத்தில் 500 பேர் ஆர்ப்பாட்டம் செய்தால் அங்கு 1000 பொலிஸார் நிற்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க வழக்கமாக ஆங்கிலத்தில்தான் கையெழுத்திடுவார் ஆனால் அவர் ஜனாதிபதியானதன் பின்னர் 3 தடுப்புக் காவல் சட்ட ஆவணங்களிலும் சிங்களத்தில்தான் கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம் அவரின் மன நிலை மாறி வருவதனைக் காண முடிகின்றது என்றார்.

பொதுமக்களின் கேள்விகளுக்கான நேரடி கலந்துரையாடல் இன்று

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ த சில்வா கலந்துகொள்ளும் நேரடிக் கலந்துரையாடல் இன்று (2) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் 11.30மணி வரை பாராளுமன்ற உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கின் (@ParliamentLK) ஊடாக நடைபெறவுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுமக்களின் கேள்விகளை #LKaskMP ஊடாக முன்வைக்க முடியும் என்பதுடன், இன்றைய தினம் நேரடியாக இணைந்து கொண்டும் கேள்விகளை முன்வைக்க முடியும்.

பொதுமக்கள் மைய பாராளுமன்றத்திற்காக மக்கள் பிரதிநிதிகளையும் பொதுமக்களையும் நேரடியாக தொடர்புபடுத்தும் வகையில் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் இந்த நேரடி டுவிட்டர் கலந்துரையாடல் தொடரை ஏற்பாடு செய்துவருகின்றது.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில்

மத்திய வங்கி அறிவிக்கவில்லை

சபைக்கு அறிவித்தது அரசாங்கம்

நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உள்ளது. ஆனால் நாட்டின் நிதி நிலைமைகள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு உரிய வகையில் மத்திய வங்கி அறிவிக்கவில்லை என அமைச்சர் பந்துல குணவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாட்டின் நிதி நிலைமைகள் படுமோசமானதைத் தொடர்ந்தே அப்போது நிதி அமைச்சராக இருந்த அலி சப்ரி பாராளுமன்றத்துக்கு நிதி நிலைமைகள் தொடர்பில் அறிவித்தார். அதன் பின்னரே சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களுக்கு அவர் சென்றதாகவும் கூறினார். எனினும் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை உரிய வகையில் பாராளுமன்றத்துக்கு நிறைவேற்றியதா? என்பதை பாராளுமன்றம் ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றின் வியாக்கியானம்

இவ்வார இறுதியில் அல்லது அடுத்தவாரம் கிடைக்கும்

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றின் வியாக்கியானம் இவ்வார இறுதியில் அல்லது அடுத்தவாரம் கிடைக்கப்பெறும். அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் பாராளுமன்றம் அடுத்தக்கட்ட நடவடிக்கையினை முன்னெடுக்கும் என நீதி அமைச்சர் விஜயதாஷ ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற இடைக்கால வரவு செலவு திட்டத்தின் மீதான இரண்டாவது நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து புதிதாக குறிப்பிட வேண்டிய அவசியம் கிடையாது. நாட்டுக்கு தேவையான கொள்கை மற்றும் சட்டத்தை இயற்றுவதும், நாட்டு மக்களுக்கான நிதி அதிகாரம் மற்றும் சுயாதீன தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவது பாராளுமன்றத்தின் பிரதான கடமையாகவுள்ளன. நாட்டின் நிதி முகாமைத்துவம் தவறாக செயற்படுத்தப்பட்டுள்ளது என்பது புதியதொரு விடயமல்ல, அவ்விடயம் குறித்து உரையாற்றி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை என்றார்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் இவ்வார பகுதியில் அல்லது எதிர்வரும் வாரம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கிறோம். நீதிமன்றத்தின் தீர்மானம் கிடைக்கப்பெற்றவுடன் மக்கள் பிரதிநிதிகள் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். தற்போதைய நெருக்கடியான

பட்டிணியில் சாகத் தயாராக இருக்கிறோம்

பணம் அனுப்ப வேண்டாம்

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு ஐந்து சதத்தைக்கூட அனுப்ப வேண்டாம். இந்த அரசாங்கத்துக்கு நிதி உதவிகளை செய்ய வேண்டாம். நாங்கள் பட்டிணியால் சாக தயாராக இருக்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளிநாட்டு வாழ் இலங்கையர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

காலி முகத்திடலில் இருந்து போராட்டக்களம் அகற்றப்பட்டிருந்தாலும் நாட்டு மக்களின் மனங்களில் போராட்டம் காணப்படுகிறது. போராட்டம் எதிர்காலத்தில் எழுச்சிப் பெறும். அதற்கான சக்தியை நாம் பெற்றுக்கொடுப்போம். நாட்டை நாசம் செய்த ஊழல் அரசியல்வாதிகளை போராட்டத்தால் மாத்திரமே விரட்டியடிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களை மீலெச்சுத்தனமாக தாக்கும் பொலிஸாரின் வீடியோக்களைப் பார்த்த இங்கிலாந்தில் உள்ள எனது நண்பர், இதுபோன்று இங்கிலாந்திலுள்ள பொலிஸார் நடந்துக்கொண்டால் அவர்களுக்கு எதிராக ஒட்டுமொத்த இங்கிலாந்து மக்களும் வீதிக்கு இறங்கி போராடுவார்கள் எனக் கூறினார். இலங்கை மக்களும் இதுபோன்ற அர்ப்பணிப்புகளை செய்ய தயாராக வேண்டும் என்றார்.

வடக்கில் மீண்டும்

சீனாவின் ஆதிக்கம் தொடர்கிறது

செல்வம் எம்.பி தெரிவிப்பு

■ க.அகரன்

வடக்கிலே சீனாவினுடைய ஆதிக்கத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என, பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (01) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்போது, மீண்டும் சீனாவினுடைய ஆதிக்கம் தொடர்வதாகவே நாங்கள் பார்க்கின்றோம். அந்தவகையில், வடக்கிலே சீனாவினுடைய பிரதிநிதிகள், அவர்களுடைய முகவர்கள் கூடுதலாகக் களம் இறக்கப்பட்டு இருக்கிறார்கள்.

"அட்டைப் பண்ணை, இறால் பண்ணை ஆகியவற்றின் அபிவிருத்தி

என்ற போர்வையில், மக்களை அதற்குள்ளே சிக்க வைத்து, இந்தியாவுக்கு எதிரானவர்களாக மாற்றுவதற்கான முயலுகைகளை சீனா செய்கின்றது.

"எமது அயல் நாடான இந்தியாவை, தமிழர்கள் பாதுகாக்க வேண்டும் என்பது எங்களுடைய கடமையாக இருக்கின்றது. ஏனென்றால் கரையோர பகுதியிலே இருப்பது தமிழர்களே.

"சீனாவினுடைய ஆதிக்கம் வடக்கில், குறிப்பாக கரையோர பிரதேசங்களில் கால் பதிப்பதை அனுமதிக்க முடியாது.

அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றால் அது, சீனாவின் முதலீட்டாக இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

"ஏனைய நாடுகள், ஏன் அயல் நாடான இந்தியா கூட, பண்ணைகளை ஊக்குவிப்பதற்கான அபிவிருத்தி பணி செயற்பாடுகளை செய்யலாம். எங்களைப் பொறுத்தமட்டில், வடக்கில் சீனாவினுடைய ஆதிக்கத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

"அது, இந்தியாவினுடைய பாதுகாப்பைத் தமிழர்கள் இன்றும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற சூழலில், அதைச் சிதைப்பதற்கான வாய்ப்பாக, கடலோர பகுதிகளில் சீனாவினுடைய முதலீடுகள் வருவது கண்டிக்கத்தக்கது" என்றார்.

கல்முனையின் சட்டம், ஒழுங்கு, நிர்வாக

சீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை தொகுதிக்கு உட்பட்ட சட்டம், ஒழுங்கு விடயம் சம்பந்தமாக திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம். எம். ஹரீஸ் தலைமையிலான கலந்துரையாடல், கல்முனை மாநகர மேயர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (31) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய கரையோர பிரதேசங்களில் சட்டவிரோதமாக இடம்பெறும் காணி அபகரிப்புகள், அனுமதியின்றி சட்டவிரோதமாக கடற்கரை ஓரங்களில் கடையமைத்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக, சட்டநடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

அத்துடன், கல்முனை பிரதேசத்தில் சமீபத்தைய நாள்களில் தலைதூக்கியுள்ள போதைவஸ்து பாவனையை இல்லாதொழிக்க விற்பனையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் எதிராக எவ்வித பாரபட்சமுமின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டு, கலந்துரையாடப்பட்டது.

மேலும், அரச அலுவலகங்களில் இலஞ்சம் பெற்று கடமையாற்றுவதை தடுக்கும் நோக்கில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் அடிப்படையில், இலஞ்ச ஊழலுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயங்களால் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர், துரிதகதியில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

நீதிமன்றில் இருந்து தப்பியோடிய இருவர்

ஒருவர் கைது

■ எம்.றொசாந்த், வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் இருந்து தப்பியோடிய இரண்டு சந்தேகநபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றையவர் இன்னும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்த இரண்டு சந்தேகநபர்களும், நேற்று முன்தினம் (31) சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை, இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்தே, நீதிமன்ற வளாகத்தில் சிறைக்காவலர்களின் பாதுகாப்பில் இருந்து, இருவரும் தப்பியோடியிருந்தார்கள்.

வவுனியா வர்த்தக நிலையங்களில்

பழைய பொருளுக்கு புதிய விலை மாற்றம்

ரூ.16 இலட்சத்துக்கு மேல் அபராதம் விதிப்பு

■ க. அகரன்

வவுனியா மாவட்டத்தில் பழைய பொருட்களுக்கு புதிய விலையை மாற்றம் செய்து, விற்பனை செய்தமை குறித்து, அதிக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட பொறுப்பதிகாரி அ. லெ ஜெஃபர்ஷாதிக் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இவ் வருடம் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில், 16 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டு உள்ளதாகவும் ஓகஸ்ட் மாதம் 48 வழக்குகள் பிடிக்கப்பட்டு, 37 வழக்குகள் பதியப்பட்டதுடன், 1,51,500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான பொருட்களை விற்பனை, விலைப் பத்திரத்தை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை, பொருட்களை பதுக்கி வைத்திருந்தமை போன்ற பல்வேறு குற்றங்கள் பிடிக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

வவுனியாவில்

கோதுமை மா

ரூ.420க்கு விற்பனை

■ க.அகரன்

வவுனியாவில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் கறுப்புச் சந்தையில் கோதுமை மா ஒரு கிலோ கிராம் 420 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வவுனியா வர்த்தக நிலையங்களில் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. கோதுமை மாவுக்கான இறக்குமதிகள் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றன.

இறக்குமதியாளர்களிடமிருந்து விநியோகஸ்தர்களுக்கு கோதுமை மா விநியோகம் இடை நிறுத்தப்பட்டு உள்ளதாலேயே, வர்த்தக நிலையங்களில் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால், கறுப்புச் சந்தையில் ஒரு கிலோ கிராம் கோதுமை மா 420 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

'திருமுறிகண்டியான்

பாதமலர்' வெளியீடு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, திருமுறிகண்டி பிள்ளையார் கோவில் முன்றலில், இளம் படைப்பாளி தி. தனுரதனின் 'திருமுருகண்டியான் பாதமலர்' நூல் வெளியீட்டு விழா, நேற்று முன்தினம் (31) நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதேயன் கலந்துகொண்டு, நூலின் முதல் பிரதியை வெளியிட்டு வைத்தார்.

மேற்படி நிகழ்வில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நல்லை ஆதின சுவாமிகள், இந்து மாமன்றத்தினர், படைப்பாளிகள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வவுனியாவில்

தனிநாயகம் அடிகளாரின் நினைவு தினம்

■ க. அகரன்

தமிழ் மொழியை உலக அரங்கில் ஏற்றிவைத்த தமிழ்த் தாயின் தன்னிகரில்லாத் தலைமகனாம் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாருடைய 42ஆவது வருட நினைவு தினம், வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவு தினம், நேற்று (01) காலை 08.30 மணிக்கு நகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது, தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாருடைய

திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தமிழ் அருவி சிவகுமாரனால் சிறப்புரையும் மேற்கொள்ளப்பட்டது.

நகர சபை உபதலைவர் ஆ. குமாரசாமி, நகர சபை உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம், சுமந்திரன், மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் கென்னடி, 'தமிழ்விருட்சம்' அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்ட

ஊடகவியலாளர் போரத்தின் செப்டெம்பர் மாதக் கூட்டம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் செப்டெம்பர் மாதக் கூட்டம், அக்கரைப்பற்று, ஓரியன்ட் பீச் ஹோட்டலில் எதிர்வரும் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

போரத்தின் தலைவர் கலாபூசணம் எம்.ஏ. பகுர்தீன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தின் போது, எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாக போரத்தின் பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம். ஹனீபா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட

பிரதேச செயலாளர் மாநாடு

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்ட பிரதேச செயலாளர் மாநாடு, அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தலைமையில், மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (31) நடைபெற்றது.

இச்சந்திப்பில், அம்பாறை மாவட்டத்தின் நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதில் பிரதேச செயலாளர்களுக்கு எழும் பிரச்சினைகள், இதற்கு மேலதிகமாக, நிறுவனப் பிரச்சினைகள், நிறுவன பௌதீக அபிவிருத்தி பிரச்சினைகள், மாவட்டத்தின் தற்போதைய அபிவிருத்தித் திட்டங்களின் நிலை, காணிப் பிரச்சினைகள், நெருக்கடிகள் போன்றவை இங்கு விவாதிக்கப்பட்டன.

மெத்தைப் பள்ளி வித்தியாலயத்தின்

74ஆவது பாடசாலை தினக் கொண்டாட்டம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள மெத்தைப் பள்ளி வித்தியாலயத்தின் 74ஆவது பாடசாலை தினம், பாடசாலையில் நேற்று (01) கொண்டாடப்பட்டது.

இதன்போது இன ஐக்கியத்தை வலியுறுத்திய, சமய, கலாசார நிகழ்வுகள் மற்றும் மாணவர் மன்றம், கலை, கலாசார, பாரம்பரிய உணவுக் கண்காட்சி போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் திருமதி முஸர்ரபா ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில், பொறியிலாளர் எம்.எம். தௌபீக், பொறியியலாளர் எம்.ஜாபீர், முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.சி. எம்.பதுர்தீன் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

காணாமல்போன பெண் விபத்தில் சிக்கினார்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

காணாமல் போன பெண், விபத்தில் சிக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய ஏ.எஸ். சித்தி நழீபா எனும் ஐந்து பிள்ளைகளின் தாய், கடந்த 23ஆம் திகதி காணாமல் போயிருந்தார்.

இவ்வாறு காணாமல் போன பெண்ணை கண்டுபிடிக்க, குடும்பத்தார் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், காணாமல் போன தாய் இரண்டு நாள்களுக்கு முன்னர் கல்முனை, அட்டப்பளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து, கல்முனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அப்பெண்ணின் கணவருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அறிவுசார் செயமர்வு

■ ஹஸ்பர்

கிண்ணியா மத்திய கல்லூரியில் தரம் 10இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான ஆரோக்கியமான அறிவு மற்றும் பாலியல் ரீதியான சட்ட திட்டங்களை எவ்வாறு முறையாக தெரிந்திருப்பது பற்றிய செயலமர்வு, பாடசாலை அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று (01) இடம்பெற்றது.

குறித்த செயலமர்வை, கிண்ணியா பிரதேச செயலக உளவளத் துணை பிரிவு, போதை தடுப்பு பிரிவு என்பன ஏற்பாடு செய்திருந்தன. இதில் வளவாளராக கிண்ணியா தளவைத்தியசாலையின் உளநலப் பிரிவின் வைத்தியர் ஏ.கே.எம். நஸ்மி கலந்துகொண்டார்.

பாடசாலை பருவத்தில் மாணவர்கள் பல்வேறு

சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இதில் பாலியல் ரீதியான முறையற்ற தகாத உறவு, காதல், பயம் போன்றன உளச் சுகாதாரத்தை பாதிக்கக் கூடிய வகையில் உள்ளன. இவற்றில் இருந்து விழிப்புணர்வு பெறுவதற்கான ஓர் ஆரம்ப கட்ட விழிப்புணர்வாகவே இந்தச் செயலமர்வு அமைந்தது.

16 வயதுக்கு உட்பட்டவர்கள் தகாத பாலியல் ரீதியான உறவில் ஈடுபட்டால், 10 வருட சிறைத் தண்டனை என்பதை சட்டம் சொல்கிறது போன்ற பல விடயங்களை, டொக்டர் நஸ்மி இதன்போது மாணவர்களுக்குத் தெளிவூட்டினார்.

மலையகத்தில் தொடர்மழை:

மீண்டும் பாதிப்பு

இரத்தினபுரிக்கும் வெள்ள அபாயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ, சிவாணிஸ்ரீ

மலையகத்தில் பெய்து வரும் கடும் மழையின் காரணமாக, மீண்டுமோர் அனர்த்தம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அறியமுடிகின்றது. ஆகையால், இக்காலப்பகுதியில் மிகவும் கவனமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

கடுமையான மழையை அடுத்து, மஸ்கெலியாவில் விமலசுரேந்திர நீர்த்தேக்கம் வான் பாய்வதுடன் , லக்ஷபான நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மலையகத்தின் மேற்கு சரிவுகளில் நேற்றுமுன்தினம் (31) தொடக்கம் பெய்து வரும் இடைவிடாத மழையால், சில நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என, நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன்

தெரிவித்துள்ளார்.

விமலசுரேந்திர நீர்த்தேக்கம் நிரம்ப ஆரம்பித்துள்ளதாகவும் அதற்கு கீழே உள்ள லக்ஷபான நீர்த்தேக்கத்தில் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தற்போது பெய்து வரும் மழையுடன் காசல்ரீ, மவுஸ்ஸாக்கலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் நிரம்பி வழிவதாகவும் இதனால், கெனியன், லக்ஷபான, நியூ லக்ஷபான, பொல்பிட்டிய, விமலசுரேந்திர நீர்மின் உற்பத்தி நிலையங்களில் மின்சார உற்பத்தி அதிகபட்ச திறனுடன் இடம்பெற்று வருகதாக, குறித்த நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் மழையால் மண்சரிவு அபாயம் உள்ளதால், ஹட்டன்- கொழும்பு, ஹட்டன்- நுவரெலியா, நுவரெலியா- கம்பளை ஆகிய பிரதான வீதிகளில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள், அவதானமாக இருக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக இரத்தினபுரி, களுகங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் இரத்தினபுரி, எலபாத்த நிவித்திகல, குருவிட்ட, பெல்மதுளை, அயகம ஆகிய பிரதேச செயலக பிரவுகளுக்கு உட்பட்ட பெருபாலான பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன.

மேலும் குறித்த பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

அடைமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று (01) பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மிகவும் குறைவடைந்து காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஏழு வயது சிறுவன் மீது கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

■ பாலித ஆரியவன்ஸ

ஏழு வயது சிறுவன், கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு பலத்த காயங்களுடன் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனது தந்தைக்கு அலைபேசிக்கு மீள்நிரப்பும் அட்டையொன்றை கொள்வனவு செய்ய கடைக்குச் சென்றிருந்த சிறுவனே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் (31) மாலை 6 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கந்தகெட்டிய, களுகஹகதுர என்ற கிராமத்தைச் சேர்ந்த சிறுவனே காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவனுக்கு விசேட வைத்திய நிபுணர்கள் ஐவர் அடங்கிய 50 பேர் கொண்ட குழுவொன்று சத்திரசிகிச்சையை முன்னெடுத்துள்ளது. சிறுவன் தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த சிறுவனின் தந்தை, தான் பிள்ளையின் கையில் 100 ரூபாயைக் கொடுத்து, மீள்நிரப்பும் அட்டையை கொள்வனவு செய்து வருமாறு கூறியதாகவும் கடைக்குச் செல்லும் வீதி மிகவும் சிறியது. இரண்டு புறங்களிலும் பற்றைக்காடுகள் உள்ளதாகவும் தெரிவித்த அவர், மகன் கடைக்குச் சென்று ஐந்து நிமிடங்களில் சத்தமிட்டார். பாம்பு ஏதும் தீண்டிவிட்டதா என பயந்து நாங்கள் ஓடினோம்.

அப்போது எமது வீட்டுக்கு அடிக்கடி வந்து செல்லும் நபரொருவர், அங்கிருந்து ஓடியதை அவதானித்தோம்.

எனது மகன் கடைக்குச் செல்லும் முன்னர், சந்தேகநபர் வீட்டுக்கு வந்ததாகவும் இதன்போது சந்தேகநபரை தேநீர் அருந்துமாறு கூறியபோது, வேண்டாம் என மறுத்து விட்டு வெற்றிலைப் போட்டதாகவும் தந்தை தெரிவித்துள்ளார்.

பின்னர் காயமடைந்த மகனை மீகஹகிவுல வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, அங்கிருந்து பதுளை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம் என்றார்.

51 வயதான சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

தந்தை பறித்த தேங்காயால்

பறிபோன மகனின் உயிர்

■ பாலித ஆரியவன்ஸ

தென்னை மரமொன்றில் ஏறி, தந்தையொருவர் பறித்த தேங்காய், அவரது மகனது தலையில் விழுந்தமையால் மகன் உயிரிழந்த சம்பவம் நமுனுகுல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் நமுனுகல, மியனகந்துர பிரதேசத்தைச் சேர்ந்த 10ஆம் தரத்தில் கல்வி கற்பவர் என்றும் தெரியவந்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் 50 அடி உயரமான தென்னை மரத்தில் ஏறி, தந்தை தேங்காய்களைப் பறித்துக் கொண்டிருந்த போது, வீட்டிலிருந்து வெளியே வந்த மகனின் தலையில் தேங்காய் விழுந்துள்ளது.

இதையடுத்து பதுளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், நேற்று (01) அதிகாலை மகன் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, இந்த மரணத்துக்கு காரணமான 55 வயது தந்தைக்கு எதிராக, கவனயீனமாக தேங்காய் பறித்த குற்றச்சாட்டின் கீழ் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டகலையில் விநாயகர் சதுர்த்தி

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, கொட்டகலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்றுமுன்தினம் (31) இடம்பெற்றன. (பி. கேதீஸ்)

லுணுகலை புனித செபஸ்தியார்

சொரூபம் தகர்ப்பு; இருவர் கைது

■ ராமு தனராஜா

லுணுகலை, அடாவத்தை எல்ட்ராடோ பிரிவின் புனித செபஸ்தியார் தேவாலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த புனித செபஸ்தியார் திருச்சொரூபம் சில விஷமிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று (1) இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் 25 மற்றும் 27 வயதான எல்ட்ராடோ, சோனகம பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேவாலயத்தின் முன்றலில் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த செபஸ்தியார் திருச்சொரூபத்தை நேற்று முன்தினம் (31) இரவு அகற்றி, அதனை எல்டராடோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் கொண்டு சென்று நொறுக்கி சேதப்படுத்தியுள்ளனர்.

இந்து- கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாக வசித்து வரும் இந்தப் பிரதேசத்தில் ஒரு சில விஷமிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் செயற்பாடானது, மதங்களுக்கு இடையிலான ஒற்றுமையை சீர்குலைக்கச் செய்யும் முயற்சியாக இருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ள நிலையில், மதுபோதையில் சந்தேகநபர்கள் இருவரும் திருச்சொரூபத்தை உடைத்துள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

"எமது பள்ளிக்கு விஜயம் செய்யுங்கள்"

■ மொஹொமட் ஆஸிக்

முஸ்லிம் பள்ளிகள் மீது, சகோதர இனங்கள் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதை தவிர்த்தல் உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாக வைத்து, கொழும்பில் இயங்கும் இஸ்லாமிய கற்கைகளுக்கான மத்திய நிலையம், நாட்டில் பல பாகங்களிலும் முஸ்லிம் பள்ளிகளுக்கு சகோதர இனத்தவர்களை அழைத்துச் சென்று, அங்குள்ள நிலைமைகளைத் தெளிவுபடுத்தும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

அதிலொரு வேலைத் திட்டமாக, கண்டி மீரா மக்கம் பள்ளியில் ஒழுங்கு செய்யப்பட்ட 'எமது பள்ளிக்கு விஜயம் செய்யுங்கள்' என்ற வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கண்டியிலுள்ள பிரபல பாடசாலைகள், தமிழ், சிங்கள மற்றும் பல்வேறு இனக்குழுக்களை சேர்ந்த பொதுமக்கள், அரச அதிகாரிகள், பிற மத தலைவர்கள், பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டு விளக்கங்களைப் பெற்றனர். மௌலவி மொஹமட் றிஸ்வான், மூனீர் ஹஸன் உள்ளிட்ட உலமாக்கள், இதில் கலந்துகொண்டு விளக்கம் அளித்தனர்.

கிஹேட்வெஸ்டன் தோட்டத் தேயிலை

அதிக விலைக்கு விற்பனை

■ பி.கேதீஸ்

உயர்தர தேயிலைகளை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்ற ஹேலிஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூள், அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் இடம்பெற்ற ஏலத்தில் Dust No. 1 தர தேயிலை தூள் 2,650 ரூபாய் விலையைப் பெற்று சாதனை படைத்தது.

இந்தத் தேயிலை போப்ஸ் மற்றும் வோக்கர்ஸ் ஆகிய தனியார் ஏற்றுமதி நிறுவனங்களால் வாங்கப்பட்டது. கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் மிகவும் தரமான தேயிலை தூள் வகைகளான FBOP ஒரு கிலோ கிராம் 3,000 ரூபாய்க்கும், BOPS ஒரு கிலோ கிராம் 1,800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இத்தோட்டத்தின் வளர்ச்சிக்கு காரணமாக, முகாமையாளர் சரத் ரணவீர, சிரேஷ்ட உதவி முகாமையாளர் தினேஸ் மெதிவக்க ஆகியோர் விளங்குகின்றனர்.

விநாயகர் சதுர்த்தி

வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீ கண்கண்ட விநாயகர் கோவிலில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பாற்குடப்பவனி, யாக பூஜை, கும்ப ஊர்வலம், விசேட தீபாரதனை என்பன சிவஸ்ரீ குமார் விக்னேஷ்வர குருக்கள், சிவஸ்ரீ பழனியாண்டி சர்மா ஆகியோரின் தலைமையில் நடைபெற்றன.

(படங்கள்: மொஹமட் ஆஸிக்)

கும்பாபிஷேகம்

■ ஆ.ரமேஸ்

கெட்டபுலா -குயின்ஸ்பரி கீழ்பிரிவு தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் இம்மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பெருவிழாவையொட்டி கிரியா ஆரம்ப நிகழ்வுகள் விநாயகர் சதுர்த்தி தினமான நேற்று முன்தினம் (31) காலை 7 மணிக்கு சுப வேளையில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது பூசைகளுடன் முகூர்த்த கால் நடப்பட்டதுடன், ஆசன கல் நாட்டு விழாவும் நடைபெற்றது. இந் நிகழ்வுகள் பிரதம குரு சிவஸ்ரீ சுந்தரலிங்கம் குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

'யாளி' திரைப்படம் திரைக்கு வருகிறது

பரணிதரன் சுந்தரமூர்த்தியின் தயாரிப்பில் Dhakshan Krish இயக்கத்தில் உருவான 'யாளி' முழு நீளத்திரைப்படம் மட்டக்களப்பில் விஜயா திரையரங்கத்தில் 28.08.2022 வெளியாகி, மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

குறித்த திரைப்படத்தை இருவேறு இடங்களிலும் வெளியிடுவதற்கு இப்படக்குழு தயாராகவுள்ளது. அந்தவகையில், எதிர்வரும் 04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இயக்குநரின் சொந்த ஊரான பொகவந்தலாவை ஈழத்துபழணி, தண்டாயுதபாணி கோவில் மண்டபத்திலும் மட்டக்களப்பு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க செங்கலடி செல்லம் திரையரங்கிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இரண்டு வருட காலமாக உருவாக்கப்பட்ட இத்திரைப்படம், சமூக குற்றங்களை அடிப்படையாக வைத்து பின்னப்பட்ட கதையை, பிரதானமாக கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

‘கடன்–செலவு’ முகாமைத்துவத்தில் கவனம் செலுத்த வேண்டும்

நாடு, இந்தளவுக்கு பொருளாதார நெருக்கடிக்கு முகக்கொடுத்திருப்பதற்கு பிரதான காரணம், ‘முறையான முகாமைத்துவம்’ இல்லையென்பதாக முன்வைக்கப்படும் விமர்சனங்களை உண்மையாக்கும் வகையில், அரசாங்கத்தின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் ஒருசில அறிவிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்துக்கு, பலரும் பல வகையான வியாக்கியானங்களைக் கொடுக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, “காகத்தின் கூட்டில், முட்டையிடும் குயில், குஞ்சு பொரித்த பின்னர், வளர்ந்து, காகத்தையே விரட்டிவிடும். அவ்வாறுதான், இந்த இடைக்கால பட்ஜெட் அமைந்துள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நாளொன்றுக்கான வருமானம் ஒரு ரூபாயாக இருந்தால், அன்றைய நாளின் செலவு இரண்டு ரூபாய் 60 சதமென்றும் கூறப்படுகின்றது. ஒரு குடும்பத்தின் நாளொன்றுக்கான தற்போதைய செலவு 3,660 ரூபாய், இது பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டிருக்கும். அப்படியாயின், இடைக்கால வரவு செலவுத் திட்டம் ஊடாக, மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லையா என்றொரு கேள்வி எழுகிறது.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் சமூக நலனோம்பல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. யூரியா உரத்தின் இறக்குமதியை முற்றாக தடை செய்தமையால், இந்தளவுக்கு திட்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பது உண்மையே. அவற்றை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யும் வகையில், 2022 நெருக்கடியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்கு, 32 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நலன்னோம்பல் திட்டங்களை உடனடியாக முன்னெடுக்க முடியாது. சில சட்டங்களைத் திருத்த வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், எவ்வாறான முடிச்சுகள் விழுமென்பது தெரியாது. சிலவேளைகளில், தகுதி இழந்தவர்களின் எண்ணிக்கை, அதிகரித்துச் செல்லும். இல்லையேல், செல்லக்கூடிய வகையில் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, முட்டுக்கட்டை இடப்படலாம்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கு, இன்னும் நான்கு மாதங்களே உள்ளன. அதற்கிடையில், சகல பிரச்சினைகளையும் தீர்க்கமுடியுமா என்பது கேள்விகுறி? என்றாலும், செலவுகளை கட்டுப்படுத்த முடியுமா என்றே, அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இதற்கிடையே, 2.9 பில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு, சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது. என்றாலும், “2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம், பொருளாதார சீர்திருத்த திட்டம், சர்வதேச நிதியத்தின் அடிப்படையிலான நுண்பொருளாதாரக் கட்டமைப்புக்கு இசைவாக இருக்க வேண்டும்” என வலியுறுத்தியுள்ளது.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியிருப்பதைப் போல, “இந்த நான்கு மாதங்களுக்கு, அரசாங்கம் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். வருமானத்தை ஈட்டிக்கொண்டு, அதனூடாக நிவாரணங்களை வழங்கவேண்டும். பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிக்கப்பட்டு உள்ளமையால் ஒவ்வொரு பொருளின் விலையும் சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கும். இது, சாமான்ய மக்களின் மீதான சுமையை அதிகரிக்கும்.

ஆகையால், சாமான்ய மக்களைப் பாதிக்காத வகையில், ‘கடன்-செலவு’ முகாமைத்துவத்தில், அரசாங்கம் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



வாழ்வியல் தரிசனம்

மனம் அதிக வேகம் உடையது. இந்த வேகம் கற்பனைக்கு அப்பாற்பட்டது. நெஞ்சத்தில் குவிந்திருக்கும் எண்ணங்கள் பலகோடி.

இவைகளின் மன ஓட்டங்கள் மூலம், கற்பனைகளுடன் மனிதர்கள் உறவாடுபவர்கள். உலகம் முழுவதையும் வினாடிகளில் சுற்றிவருகின்றனர்.

ஒவ்வொரு செக்கன் துளிகளில், சகல பிரதேசங்கள், நகரங்களில் சுற்றித் திரிகின்றனர். கனவை விட, கற்பனை நீண்டது.

கனவு உடன் மறந்தும் போகலாம். ஆனால், மனம் உண்மையான நிழல் போல், அதனூடு உறவாடுகின்றார்கள். தங்களுக்குள் புன்முறுவல் செய்வார்கள். சில சமயங்களில், வேண்டாத நிலையில், கண்டதையும் காண விழைகின்றார்கள்.

தற்போது அலைபேசி மூலம் உறவினர், நண்பர்கள், குடும்பத்தினர் போன்றோருடன் ஆளைப்பார்த்து, நேரடியாகப் பேசி மகிழ்கின்றனர்.

எனினும் நடக்காத விடயங்களை நெஞ்சம் நாடுகின்றது. சிறப்பான எண்ணங்கள், எங்களை நிஜத்துடன் இணைத்து விடுகின்றன. எண்ணங்களுக்குப் பலம் உண்டு. நல்லதை எண்ணுக!

பருத்தியூர் பால. வயிரவநாதன்

இடைக்கால வரவு செலவுத் திட்டம்:

சர்வதேச நாணய நிதியமே வருக!

தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு செலவுத் திட்டமானது, இந்த அரசாங்கம் நாட்டை எத்திசையில் நகர்த்த முனைகிறது, யாருக்கானதாக அரசாங்கம் இருக்கிறது போன்ற வினாக்களுக்கான பதில்களைத் தந்துள்ளது.

அந்தவகையில், இந்த வரவு செலவுத் திட்டம் முக்கியமானது. தனது உரையின் தொடக்கத்தில், நான்கு விடயங்களை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இவை நான்கும் மிகத் தெளிவாக, இலங்கை அரசாங்கம் வெளிப்படையாகவே சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு செயன்முறையாகவே, இந்த வரவு செலவுத் திட்டம் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தின.

ஒருபுறம், வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகையில் மறுபுறம், போராட்டக்காரர்கள் மீது கட்டற்ற வன்முறை ஏவப்பட்டது.

இவை இரண்டும், ஒன்றுடனொன்று தொடர்பற்றவை போல்த் தோன்றலாம். ஆனால், உண்மையதுவல்ல; இலங்கையர்களின் ஒட்டுமொத்த எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கி, எமது எதிர்கால சந்ததிகளைப் படுகுழியில் தள்ளும் காரியத்துக்கான தொடக்கப் புள்ளியாக, இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் இருக்கின்றன.

இடைக்கால வரவு செலவுத் திட்ட உரையின் தொடக்கத்தில், அவர் சுட்டிக்காட்டிய நான்கு விடயங்களில் முதலாவது, “நாட்டின் பொருளாதார நெருக்கடி, மிகத்தீவிரமாக உள்ளது. ஆனால், மக்கள் அதன் தீவிரத்தை உணரவில்லை” என்பதாகும். இங்கு கேட்கப்படும் கேள்வி யாதெனில், அரசாங்கமும் அதன் உறுப்பினர்களும் நாட்டின் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை உணர்ந்திருக்கிறார்களா?

இன்றும் அரச விழாக்கள், பெருந்தொகை பணச்செலவில் நடத்தப்படுகின்றன. ஊழல் குறையவில்லை. அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோரின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்கின்றன. அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகளை, நேரடியாகவும் ஊடகங்களின் வழியாகவும் அன்றாடம் காண்கிறோம். இவை எவற்றையும் கண்டுகொள்ளாத ஜனாதிபதியும் அரசாங்கமும், மக்கள் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை உணரவில்லை என இப்போது சொல்கிறார்கள்.

இரண்டாவது: “அரசாங்கம், தேசிய மயமாக்கலை நடைமுறைப்படுத்திய காலத்திலிருந்து, நாட்டின் வரி வருவாயின் பெரும்பகுதி, அரச நிறுவனங்களின் நட்டத்தை ஈடுசெய்யவே செலவிடப்பட்டது. சமூகத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய நிதி, இந்த நிறுவனங்களைத் தொடர்ந்து நடத்துவதில் வீணடிக்கப்படுகிறது”.

இந்தக் கூற்று சரியானதல்ல. தேசிய மயமாக்கல், பல முக்கிய பலன்களையும் அதுசார் வருமானத்தையும் அரசாங்கத்துக்கு வழங்கிய காலமொன்று இருந்தது. இலங்கையின் பொருளாதார வரலாற்றை அறிந்தவர்கள், அதை அறிவர்.

1977இல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாலும் அந்நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டமையாலுமே, அந்நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கத் தொடங்கின என்ற உண்மையை, ரணில் மறைத்துவிடுகிறார். அவரின் மேற்சொன்ன கூற்று, அரச நிறுவனங்களை தனியார் மயமாக்க வேண்டும் என்ற, சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு வலுச் சேர்ப்பதற்காக அமைந்திருக்கிறது.

மூன்றாவது: “அரசாங்கம் கொள்கைகளை உருவாக்க வேண்டுமேயன்றி, இலாபம் தரும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது”.

இக்கூற்று, மிகவெளிப்படையாக நவதாராளவாத திறந்த பொருளாதார அடிச்சுவட்டை அப்படியே பிரதிபலிக்கிறது. அரசு, அனைத்தையும் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும். கொள்கைவகுப்புக்கு அப்பால், அரசு தலையிடக்கூடாது; அனைத்து அலுவல்களையும் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும். இலாபமோ நட்டமோ, அது அவர்களின் பாடு என்று விட்டுவிட வேண்டும். இதைத்தான் ரணில் முன்மொழிகிறார். இதன்மூலம் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உட்பட்ட துறைகளை தனியாரிடம் ஒப்படைத்தல் வேண்டும் என்பதாகும்.

நான்காவது: “நாட்டை விட, தங்கள் சொந்த நலனுக்காகவும் மக்களைக் கவரும் சொல்லாடல்கள், அரசியல் மயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளில், கடந்த கால அரசாங்கங்கள் ஈடுபட்டமையே, நமது பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்”.

இவ்வாறு கடந்தகால அரசாங்கங்களைக் குறைசொல்கின்ற ரணில், கடந்த அரை நூற்றாண்டில் பல்லாண்டு காலம், அரசாங்கங்களில் அங்கம் வகித்தவர் என்பதை மறந்துவிட்டார். இலங்கை மோசமான அரசியல்மயமாக்கலைச் சந்தித்த காலம் 1977 முதலான 17 ஆண்டுகள். இக்காலத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர் ரணில். இறுதியாக, இவர் பிரதமராகப் பதவி வகித்த, 2015 - 2019 வரையான காலத்தில், அரசாங்கத்தின் யோக்கியதை என்னவென்று நாமறிவோம்.

ஜனாதிபதியின் இந்த வரவு செலவுத் திட்ட உரையின் முக்கிய பகுதி, “ஐக்கிய நாடுகள் சபை, முன்னணி சர்வதேச அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து, உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. அன்றாட தேவைகளான எரிவாயு, மின்சாரம், எரிபொருள் போன்றவற்றை தட்டுப்பாடு இன்றி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன; பல்கலைக்கழகங்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடங்குகின்றன” என்பதாகும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி பற்றிய, அரசாங்கத்தின் புரிதல் எத்தகையது என்பதை, இக்கூற்றுகள் தெளிவாக விளக்குகின்றன.

மக்களுக்கு உணவு வழங்கும் பொறுப்பை ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிப்பது, பாடசாலைகள், பல்கலைக்கழகங்களைத் திறப்பது, எரிவாயு, மின்சாரம், எரிபொருளை வழங்குவது என்பதோடு, எமது பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணவியலும் என்று அரசாங்கம் சொல்கிறது.

பொருட்களின் அபரிமிதமான விலையேற்றம், மருந்துத் தட்டுப்பாடு, பணவீக்கம், சிறுதொழில்கள் நசிவு, அன்றாட உழைப்பாளிகளின் வருமானமின்மை போன்றவை எவையும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பொருட்டல்ல.

‘மக்களின் நலன்களைப் பேணுதல்’ என்ற பொறுப்பில், அரசாங்கம் எவ்வளவு அசண்டையீனமாக இருக்கிறது என்பதற்கு, இன்னொரு சான்று உள்ளது. வரவு செலவுத் திட்ட உரையில், இலங்கையில் 61,000 குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி தெரிவித்தார். சிலவாரங்களுக்கு முன்னர், இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை தொடர்பில் விரிவான அறிக்கையை ‘உலக உணவு நிகழ்ச்சித் திட்டம்’ வெளியிட்டது. அதில், 63 இலட்சம் இலங்கையர்கள், மோசமான உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கம், 63 இலட்சத்தை 61,000 எனக் குறைவாக எண்ணிக்கையை கருதியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில், சமூகநல வெட்டுகளை அறிமுகப்படுத்துவது, இந்த வரவு செலவுத் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்!

இன்று, இலங்கையில் பொருட்களின் விலைகள், பன்மடங்கு அதிகரித்துள்ளன, பணவீக்கம் மோசமாக உள்ளது, வேலைவாய்ப்புகளும் வருமானம் ஈட்டும் வாய்ப்புகளும் குறைந்துள்ளன. இந்நிலையில், அரசாங்கம் இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடு, பின்வருவனவற்றை முன்மொழிகிறது:

4,500 ரூபாயாக வழங்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு 3,100 ரூபாயாக குறைப்பு.

5,000 ரூபாயாக இருந்த மூத்தோருக்கான கொடுப்பனவு 2,500 ரூபாயாக குறைப்பு.

சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 5,000 ரூபாயிலிருந்து 2,500ஆகக் குறைப்பு.

இந்த வரவு செலவுத் திட்டம், சாதாரண மக்களுக்கானதல்ல; அன்றாடம் உழைக்கும் மக்களுக்கானதல்ல. பல புதிய வரிவிதிப்புகளை இந்த வரவு செலவுத் திட்டம் முன்மொழிகிறது. அதில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் வரிவிதிப்புக்குள் உள்வாங்கல்; பெறுமதிசேர் வரியை அதிகரித்தல் போன்றன குறிப்பிடத்தக்கவை.

ஆனால், செல்வந்தர்களுக்கான வரி பற்றி எதுவுமில்லை. அரசாங்கம், சாதாரண மக்களிடம் வரிச்சுமையை ஏற்றுவதையே செய்கிறது. அதேவேளை, ‘வர்த்தக விரிவாக்கம்’ என்ற பெயரில், செல்வந்தர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கப்படப் போகின்றன.

இந்த வரவு செலவுத் திட்டம், இன்னொரு முக்கியமான விடயத்தை முன்மொழிந்துள்ளது. அது, கல்வியின் தனியார் மயமாக்கலை நோக்கிய முதற்படி. “வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் தங்கள் கிளைகளை இலங்கையில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்படும். உயர்கல்வியில் தனியார் முதலீட்டுக்கான இடத்தை உருவாக்குவது; அரசாங்க வளங்களை விடுவித்தல். இதன்மூலம் அரசநிதி மிச்சப்படுத்தப்படும்” என்றார் ஜனாதிபதி.

ஆகமொத்தத்தில், மெதுமெதுவாக அரச பல்கலைக்கழகங்களுக்கான நிதியைக் குறைத்து? அரச பல்கலைக்கழகங்களை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்குத் தாரைவார்க்கும் கைங்கரியத்தின் முதற்படியே இது. இலங்கையின் இலவசக் கல்வி மிகப்பெரிய சவாலை எதிர்நோக்கியுள்ளது.

இன்று அரசு ஆர்ப்பாட்டங்களை அடக்குகிறது; எதிர்க்குரல்களை நசுக்குகிறது. இதை அரசாங்கம் செய்வது, சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சிநிரலை எந்தவோர் எதிர்ப்பும் இன்றி நடைமுறைப்படுத்தவே ஆகும்.

எமக்கானதை, எமது குழந்தைகளுக்கானதை நாம் இழந்துவிட்டு, அதிகாரத்துக்கு சேவகம் செய்யும் தலைமுறையை உருவாக்க, நாம் அனுமதிக்கப் போகின்றோமா? அதிகாரத்தைக் கேள்வி கேட்கவும் எதிர்க்கவும் கூடிய ஒரு சமூகத்தின் உருவாக்கத்துக்கு வழிகோலப் போகின்றோமா?

கடிதங்கள்

தோப்பூர் பிரதேசத்தில்

கைவிடப்பட்ட வேளாண்மை செய்கை

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் பிரதேசத்தில் உள்ள அல்லை விவசாய சம்மேளனத்துக்கு உட்பட்ட கிரான்வெளி, வட்டவன் போன்ற வெளிகளில், இம்முறை சுமார் 125 ஏக்கர் வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்படாது, கைவிடப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

உரிய நேரத்துக்கு பசளை வழங்கப்படாமையால், இம்முறை தாம் வேளாண்மை செய்கையை மேற்கொள்ள முடியாது, கைவிடும் நிலைமை தோன்றியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த காணிகளை குத்தகைக்கு எடுத்தே, வேளாண்மை செய்கை மேற்கொள்வதாகவும், எனினும் இம்முறை பசளைப் பிரச்சினையால், வேளாண்மை செய்யாவிட்டாலும், வயல் சொந்தக்காரர்களுக்கு குத்தகை கொடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகி உள்ளதாகவும் கவலை வெளியிட்டனர்.

இதுவிடயத்தில், புதிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு, விவசாயிகளுக்கான பசளையை உரிய நேரத்துக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, தோப்பூர் பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தீஷான் அஹமட்

மனநல உதவி சேவையான 1926 ஐ எயார்டெல் Whatsappக்கு விஸ்தரிப்பு

Airtel Lanka, தேசிய மனநல சுகாதார நிறுவனத்துடன் (NIMH) இணைந்து Whatsapp மூலம் மனநல உதவி சேவைகள் தொலைபேசி இலக்கமான 1926ஐ இணைக்கும் வசதியை விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளது. இதன்மூலம் மனநல ஆரோக்கியத்திற்கான தேவை ஏற்படும் அனைவரும் இப்போது NIMHஇன் மனநல உதவி சேவைகளை 075 555 1926 என்ற WhatsApp எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

"கடந்த காலத்தில் அமுல்படுத்தப்பட்ட முடக்கநிலைகள் மற்றும் பெரும்பாலான தனிமைப்படுத்தல் ஆகியவை மனநலம் தொடர்பான பிரச்சினைகள் அதிகரிக்க வழிவகுத்தன. எனவே, WhatsApp மூலமான தீர்வுகளை வழங்குதல் காலத்தின் தேவையாக இருந்தது. Chat-line மூலம் தொடர்புகொள்பவர்களில் பெரும்பாலோர், சமாளிப்பதற்குப் போராடும் இளம் வயதினர்களாகவே உள்ளனர்."

"பெரும்பாலானோர், Text Message அனுப்புதல் நிச்சயமாக ஒரு சிறந்த தீர்வாகும், குறிப்பாக இளைஞர்களுக்கு, பேசுவதற்குப் பதிலாக Chat செய்வது வசதியாக இருக்கும், குறிப்பாக எங்களுடன் உரையாடல் செய்ய ஆரம்பிக்கும் போது, மேலும் அணுகலை விரிவுபடுத்துவதற்கான எங்கள் முயற்சிகளை ஆதரித்த எயார்டெல் குழுவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்." என NIMHஇன் சிரேஷ்ட மனநல மருத்துவர் வைத்தியர் புஷ்பா ரணசிங்க தெரிவித்தார்.

2020 உலக மனநல தினத்தின் போது அறிமுகப்படுத்தப்பட்ட SMS ஊடான சேவை, பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கும் மனநிலை காரணமாக சவால்களை எதிர்கொள்ளும் பெரும்பாலானவர்களுக்கு உதவிகளை வழங்கவும், ஆறுதல் அளிக்கவும் மற்றும் வழிநடத்துதல்களை வழங்குவதற்கு மேலதிகமாக 100க்கும் மேற்பட்ட உயிர்களை காப்பதற்கு உதவியாக உள்ளது.

"எயார்டெல் நிறுவனம் NIMHஇல் செய்து வரும் நம்பமுடியாத சேவைகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதில் பெருமிதம் கொள்கிறது, மேலும் 1926 Whatsapp சேவையின் விரிவாக்கமானது இன்னும் அதிகமான இலங்கையர்களை அணுகுவதற்கு உதவியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என எயார்டெல் ஸ்ரீ லங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷீஷ் சந்திரா கூறினார்.

Whatsapp இல் சேவையை விரிவுபடுத்துவதற்கான எயார்டெல்லின் முடிவு, Voice அல்லது குறுந்தகவலை விட Data பயன்பாட்டிற்கான விருப்பத்தைக் காட்டும் இளம் பாவனையாளர்களுக்கு நேரடியான சிறந்த முறையாக அமையும். இந்த App ஆல் வீடியோ அழைப்புகள், மருத்துவச் சீட்டுகளை பகிர்தல் மற்றும் Voice Notes உட்பட பல்வேறு தீர்வுகளை பயன்படுத்த முடியும்.

"1926 சேவையின் இந்த சமீபத்திய விரிவாக்கம் மூலம், எயார்டெல் மனநலத்தைச் சுற்றி ஒரு திறந்த மற்றும் புரிந்துகொள்ளும் கலாச்சாரத்தின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்துகிறது, இது அதிக இளைஞர்களை தொழில் வல்லுநர்களிடம் அணுக ஊக்குவிக்கிறது. அவர்கள் நெருக்கடியான காலங்களை அனுபவிக்கும் போது இது மிகவும் முக்கியமானது மற்றும் பாதுகாப்பான மற்றும் இனந்தெரியாத சூழலில் அவர்களின் மனதிலுள்ள கவலைகள் குறித்த வழிகாட்டுதலின் மூலம் பயனடையலாம். இறுதியில், நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் அழுத்தங்களை எதிர்கொண்டாலும், அல்லது உங்களுக்கு மனநலம் தொடர்பில் ஒரு சிறிய உதவி தேவை என உணர்ந்தாலும், எளிதில் அணுகும் சேவை அனைத்து மாற்றங்களையும் ஏற்படுத்தும். இந்த புதிய அறிமுகப்படுத்தலின் மூலம் நீங்கள் அதிகப் பலன்களைப் பெறுவீர்கள் என்று நம்புகிறோம், மேலும் அதில் ஒரு பங்குதாரராக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்." என அஷீஷ் மேலும் தெரிவித்தார்.

செலான் கடனட்டைகளுடன்

ஆசிரி வைத்தியசாலை கட்டணங்கள் செலுத்தும் வசதி

விசேட இலகு தவணை கொடுப்பனவு (EPP) திட்டத்தினூடாக ஆசிரி வைத்தியசாலை குழுமத்தின் வைத்தியசாலைக் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இலகுவாக்கும் வகையில் ஆசிரி வைத்தியசாலை குழுமத்துடன் செலான் வங்கி கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது. அன்புக்குரியவர் சுகயீனமடைவதால் ஏற்படும் அழுத்தத்தை புரிந்து கொண்ட அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, வாடிக்கையாளர்களுக்கு வைத்தியசாலை கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிவாரணத்தை வழங்குவதற்காக முன்வந்துள்ளது. இதனூடாக அவர்களுக்கு இந்த நெருக்கடியான காலப்பகுதியில் அத்தியாவசிய தேவைகளுக்காக அத்தியாவசிய அட்டையினூடாக மனநிம்மதியை பெற்றுக் கொள்ள முடியும்.

எந்தவொரு ஆசிரி வைத்தியசாலையிலும் செலான் கடனட்டையை பயன்படுத்தி கொடுப்பனவை மேற்கொள்ளும் செலான் கடனட்டை வாடிக்கையாளர்களுக்கு விசேட இலகு தவணை கொடுப்பனவு (EPP) திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். 6 மாத காலப்பகுதிக்கு 0% வட்டியில்லாத முறையில் மீளச் செலுத்தும் வசதி வழங்கப்படும். வட்டியில்லாத இந்த இலகுமுறை மீளச் செலுத்தல் வசதியினூடாக, வாடிக்கையாளர்களுக்கு தமது செலவை படிப்படியாக செலுத்தக்கூடியதாக இருக்கும். இந்த வசதி 2022 டிசம்பர் 31ஆம் திகதி வழங்கப்படும். இந்த வசதியினூடாக, செலான் வங்கியினால் அட்டைதாரர்களுக்கு தமது அன்புக்குரியவர்களின் நெருக்கடியான காலப்பகுதியில் மேற்கொள்ளும் மொத்தக் கொடுப்பனவுகளின் போது தொடர்ச்சியான நிவாரணம் வழங்கப்படும்.

இலங்கையில் காணப்படும் முன்னணி சுகாதார பராமரிப்பு சேவை வழங்குநராக ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸ் திகழ்கின்றது. அர்ப்பணிப்பான, திறன் படைத்த மற்றும் அனுபவம் வாய்ந்த சுகாதாரப் பராமரிப்பு அணியினரை தன்வசம் கொண்டுள்ளது. தொழிற்துறையில் காணப்படும் பல நவீன சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் ஆசிரி ஹொஸ்பிட்டல்ஸ், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களை பின்பற்றி, பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான நோயாளர் பராமரிப்பு சேவையை வழங்குகின்றது. தரம் மற்றும் நோயாளர் பராமரிப்பு போன்றவற்றுக்கான வைத்தியசாலையின் அர்ப்பணிப்பை உறுதி செய்து, Joint Commission International இன் Gold Seal அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆசிரி சேர்ஜிகல் ஹொஸ்பிட்டல், ஆசிரி மெடிகல் ஹொஸ்பிட்டல், ஆசிரி ஹொஸ்பிட்டல் காலி மற்றும் ஆசிரி ஹொஸ்பிட்டல் மாத்தறை ஆகியவற்றுக்கு Australian Health Care Accreditation (ACHS) அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பங்காண்மை தொடர்பில் செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "எமது அட்டைதாரர்களுக்கு இந்த கொடுப்பனவு திட்டத்தை பெற்றுக் கொடுப்பதற்காக முன்னணி சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்கும் ஆசிரி குழும வைத்தியசாலையுடன் நாம் கைகோர்த்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். தற்போதைய சூழலில், சுகாதார பராமரிப்பு துறையின் தேவைகளை நிவர்த்தி செய்யும் செலவுகளை தாங்கிக் கொள்வதில் பெரும் சிக்கல்களுக்கு பொது மக்கள் முகங்கொடுத்துள்ளனர். அத்தியாவசிய தேவைகளுக்கான அத்தியாவசிய அட்டை எனும் வகையில், இது போன்ற தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பங்காண்மைகளினூடாக வாடிக்கையாளர்களின் சுமையை குறைப்பதற்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

செலான் அட்டைதாரர்களுக்கு வருடம் முழுவதிலும் வழங்கப்படும் பல்வேறு சலுகைகளினூடாக தொடர்ச்சியாக பயன் பெறுவதுடன், தினசரி கொள்வனவுகளின் போது நிதிசார் நிவாரணத்தையும் அனுபவித்து வருகின்றனர். அதன் பிரகாரம், ஆகக் குறைந்த கையாளல் கட்டணத்தைச் செலுத்துவதனூடாதக, எந்தவொரு கொடுக்கல் வாங்கலையும் இலகு முறையில் தவணைகளில் மீளச் செலுத்தும் வசதிக்கு மாற்றிக் கொள்ளும் வசதியை செலான் அட்டைதாரர்கள் கொண்டுள்ளனர்.

ராஜாவைவோர்:

சதுர்த்தி சப்பரத்தில் மின்சாரம் பாய்ந்ததில் 2 பேர் பலி

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே சொக்கநாதன் புத்தூரில் ஓகஸ்ட் 31ஆம் திகதி இரவு நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் மின் கடத்தி மீது சப்பரம் மோதியதில் 2 பேர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

விநாயகர் சதுர்த்தி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிலையில், சொக்கநாதன்ம் புத்தூர் பகுதியில் பேருந்து நிலையம் அருகே குலாலர் தெருவில் விநாயகர் சதுர்த்தி சப்பர ஊர்வலம் அன்றிரவு நடைபெற்றது. ஊர்வலத்தில் சிறியவர்கள், பெரியவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

சப்பரம், மின்கடத்தி மீது சரிந்ததில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் மேலும் நால்வர் காயமடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோழிக்கோடு:

விபத்தில் காயமடைந்தவரை கொன்ற அம்புலன்ஸ் பூட்டு

விபத்தில் படுகாயம் அடைந்த 53 வயதானவரை ஏற்றி வந்த ஆம்புலன்சின் கதவில் ஏற்பட்ட கோளாறால் திறக்க முடியவில்லை. அதனால், உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாமல் அவர் பரிதாபமாக இறந்த சம்பவமொன்று கேரளாவில் இடம்பெற்றுள்ளது.

அந்த அம்புலன்சில் காயமடைந்தவரின் நண்பரும் இருந்தார். வைத்தியசாலையில் வைத்து அம்புலன்சின் பூட்டில் கோளாறு ஏற்பட்டு, 'ஜாம்' ஆனது. ஆம்புலன்ஸ் டிரைவர், மருத்துவமனை ஊழியர்கள் இணைந்து கதவை திறக்ககடுமையாக முயற்சித்தனர். ஆனால் முடியவில்லை. அங்கு திரண்ட பொதுமக்கள், கோடாரியின் உதவியுடன் பூட்டை உடைத்து, ஆம்புலன்ஸ் கதவை திறந்தனர்.

அதற்குள், அவர் பரிதாபமாக இறந்தார். உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்க முடியாததால், அவர் இறந்து விட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

பாலக்காடு

தனிமையில் சந்தித்ததால் ஆபாசம் அம்பலமானது

கேரள மாநிலம் திருச்சூர் அருகே கொடுங்கல்லூரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு, இன்ஸ்டாகிராம் மூலம் இளம் பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இருவரும் மிகவும் நெருக்கமாக பழகி வந்த நிலையில் அந்த பெண் கணவர் துபாயில் இருப்பதாகவும், தனிமையில் சந்திக்க வீட்டிற்கு வருமாறும் ஆசை வார்த்தை கூறியுள்ளார்.

அதை நம்பிய தொழிலதிபர், பாலக்காடு அருகே உள்ள யாக்கரை பகுதியில் உள்ள வீட்டில் இளம்பெண்ணை தனிமையில் சந்தித்து பேசிக் கொண்டிருந்துள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த 5 பேரடங்கிய கும்பல், தொழில் அதிபரை தாக்கி ஆபாச வீடியோ, மற்றும் போட்டோக்களை எடுத்துள்ளனர்.

தங்களுக்கு பணம் தராவிட்டால் இந்த வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிடுவோம் என்று மிரட்டிய அந்த கும்பல், கழுத்தில் கிடந்த 4 சவரன் தங்க செயின் , செல்போன் , ஏடிஎம் கார்டு ,கார், பத்தாயிரம் பணம் மற்றும் காரில் இருந்த ஒரு சில ஆவணங்களையும் பறித்துக் கொண்டு விரட்டி உள்ளது.

வீட்டிற்குச் சென்றால்தான் பணம் கொடுக்க முடியுமென தொழிலதிபர் கூறியுள்ளார். இதனையடுத்து அவரை காரில் ஏற்றி அந்த கும்பல் கொடுங்கல்லூருக்கு அழைத்து சென்று கொண்டிருந்தனர். வழியில் தொழிலதிபர் காரில் இருந்து குதித்து தப்பி ஓடியுள்ளார்.

அதன்பின்னர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளின் போது அந்தப் பெண் உட்பட அறுவர் கைது செய்யப்பட்டனர். தன்னுடன் இன்ஸ்டாகிராமில் பழகுவோரை, அழைத்து பணம் பறிக்கும் செயற்பாடுகளை அக்கும்பல் மேற்கொண்டு வருவதாக அறியமுடிகின்றது.

புதுடெல்லி

சோனியா காந்தியின் தாயார் காலமானார்

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் தாயார் பாவ்லா மைனோ, வயது முதிர்வு காரணமாக இத்தாலியில் உள்ள தனது வீட்டில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 90.

முதுமை காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த தாயாரைப் பார்ப்பதற்காகச் சோனியா காந்தி கடந்த 23 ஆம் திகதி இத்தாலி புறப்பட்டுச் சென்றார். அவருடன் மகன் ராகுல் காந்தி, மகள் பிரியங்கா காந்தி ஆகியோரும் சென்றனர்.

இந்நிலையில், சோனியா காந்தியின் தாயார் பாவ்லா மைனோ கடந்த 27-ம் திகதி இத்தாலியில் உள்ள தனது வீட்டில் உயிரிழந்ததாகக் காங்கிரஸ் கட்சி இப்போது தகவல் வெளியிட்டுள்ளது. இதையடுத்து காங்கிரஸ் பிரமுகர்கள் தங்களது இரங்கலைப் பதிவு செய்து வருகிறார்கள்.

புதுச்சேரி

61 க்கும் 28 க்கும் டும்...டும்...

பிரான்ஸில் வசித்து வரும் புதுச்சேரியைச் சேர்ந்த 61 வயதானவர், தனது உறவினர்களை காண புதுச்சேரிக்கு வந்துள்ளார். தனது மனைவி இறந்ததால் தனிமையில் வாடுவதாகவும், குடும்ப பொறுப்புகளை கவனித்துக் கொள்ள யாரும் இல்லாமல் கஷ்டப்பட்டு வருவதாக புலம்பியுள்ளார்.

இதை பார்த்த உறவினர்கள் அப்பகுதியை சேர்ந்த கணவனை இழந்த 28 வயதான இளம் பெண்ணை அனுகி, இது தொடர்பாக எடுத்துக்கூறி முதியவரை திருமணம் செய்து கொள்ளும்படி தெரிவித்துள்ளனர்.

முதியவரை திருமணம் செய்ய அந்த பெண்ணும் சம்மதித்து பிரான்ஸ் நாட்டுக்குக் செல்லவும் சம்மதித்தாக கூறப்படுகிறது.

அந்த பெண், முதியவரை திருமணம் செய்து கொண்டு பிரான்ஸ் நாட்டில் செட்டில் ஆகலாம் என்பதற்காக அவரை திருமணம் செய்து கொண்டிருக்கலாம் என்று பலரும் தெரிவித்து கூறி வருகின்றனர். அது மட்டும் இல்லாமல் அந்த பெண்ணின் குடும்பத்திற்கு 2.5 கோடி ரூபாய் முதியவர் தரப்பிலிருந்து வழங்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

156ஆவது ஆண்டில்

கால்பதிக்கும் பொலிஸ்

இலங்கையில் பொலிஸ் கடமைகளுடன் தொடர்புடைய வரலாறு இரண்டு நூற்றாண்டுகளுக்கும் பழமையானது. 1866 செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி, பொலிஸ் மா அதிபர் பதவிக்கு ஜி.டபிள்யூ.ஆர். காம்ப்பெல் முதன்முதலில் நியமிக்கப்பட்ட நாளைக் கருத்தில் கொண்டு, பொலிஸ் சேவை அரசியலமைப்பு ரீதியாக நிறுவப்பட்ட நாளாக, 156 ஆவது பொலிஸ் தினம் நாளை(03) நினைவுகூரப்படுகிறது.

வரலாற்று பிரதிபலிப்பு நிறுவன வளர்ச்சியின் அடிப்படையாகும். பொலிஸ் வரலாற்றுத் தகவல்கள் சிறப்பாகவும், பொதுமக்களுக்கு நட்பாகவும், வளர்ச்சிக்கு உதவும் பொலிஸ் சேவையை கட்டியெழுப்புவதில் மிகவும் முக்கியமானது.

டச்சுக்காரர்கள் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர் 1650 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு மாநகர சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, கொழும்பு நகரில் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவும், இரவு நேரத்தில் நகரைக் காக்கவும் இராணுவத்தினர் அனுப்பப்பட்டவர். இலங்கையில் கிடைத்துள்ள சில ஆதாரங்களின்படி, இலங்கையில் பொலிஸ் கடமைகளின் ஆரம்பம் இவ்வாறு அமைந்திருந்தது.

கொழும்பு நகரில் பொலிஸ் கடமைகளுக்காக இராணுவ சிப்பாய்களும், கோட்டைப் பகுதியில் டச்சுப் படையினரும், கோட்டைப் பகுதிக்கு வெளியே மலாய் வம்சாவளியைச் சேர்ந்த கூலிப்படையினரும் அப்போது பொலிஸ் கடமைகளைச் செய்ய அனுப்பப்பட்டனர்.

1806 ஆம் ஆண்டில், கொழும்பு நகருக்கு வெளியே பொலிஸ் கடமைகளை நிறைவேற்றுவதற்கான கட்டளைச் சட்டத்தை ஆங்கிலேயர்கள் இயற்றியதுடன், 1833 இல், அரசாங்கத்தால் ஊதியம் பெறும் பொலிஸ் சேவை தொடங்கப்பட்டது.

இந்த நேரத்தில், கொழும்பு பொலிஸ் அத்தியட்சகராக தோமஸ் ஒஸ்டின் நியமிக்கப்பட்டார். அப்போது கொழும்பில் சனத்தொகையாக இருந்த 39,000 பேருக்கு பொலிஸ் சேவைகளை வழங்குவதற்காக 165 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய பொலிஸ் குழுவொன்று கடமையாற்றியிருந்தது.

1843 ஆம் ஆண்டில், அந்த நேரத்தில் நடைமுறையில் இருந்த பொலிஸ் கட்டளை ரத்து செய்யப்பட்டதுடன், நாட்டின் எந்த நகரத்திலும் பொலிஸ் நிலையங்களை நிறுவ ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1843 ஆம் ஆண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவி அறிமுகப்படுத்தப்பட்டு, அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதுடன் பொலிஸ் பியூன் பதவி நீக்கப்பட்டு, பொலிஸ் கான்ஸ்டபிள் பதவி அறிமுகப்படுத்தப்பட்டது. 1863 ஆம் ஆண்டின் இறுதியில், 48 பொலிஸ் நிலையங்கள் இருந்தன. 1867 ஆம் ஆண்டளவில், பொலிஸ் தலைமையகம் மருதானையில் உள்ள பள்ளிவாசலுக்கு அருகில் அமைந்திருந்தது. 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு முன்னரே இலங்கையின் முதலாவது பொலிஸ் மா அதிபராக சர் ரிச்சர்ட் அலுவிஹாரே நியமிக்கப்பட்டார். அவர் இந்நாட்டின் 11வது பொலிஸ் மா அதிபராவார்.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களுக்கு ஏற்ப அப்போதைய பொலிஸ் திணைக்களமும் மாற்றப்பட்டு நாடளாவிய ரீதியில் அதிகளவான பொலிஸ் நிலையங்கள் உருவாக்கப்பட்டு பல்வேறு கடமைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பொதுமக்களின் அனைத்துப் பொறுப்புகளையும் பொறுப்புக்கூறலையும் நிறைவேற்றும் முக்கிய நிறுவனங்களில் பொலிஸ் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. எனவே, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதில் இடையூறு விளைவிக்கும் அனைத்தையும் அடக்குவதற்கு பொலிஸாரின் முயற்சிகளில் மக்களிடமிருந்து பொலிஸார் அந்நியப்படுவது ஒரு பொதுவான நிகழ்வாக மாறியது. ஆனால் பொலிஸ் பணியில் மக்கள் தொடர்பு அவசியம்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் கலவரங்கள் பொலிஸாரால் நேரடியாக கையாளப்பட்டன. 1971 ஆம் ஆண்டில், அரசாங்கத்துக்கு எதிரான கலகக் குழுக்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியில் முதலில் பொலிஸாரையே தாக்கின.

இவ்வாறானதொரு சூழலை ஏற்படுத்தியமையினால் இராணுவ குணாதிசயங்கள் இன்றி உருவாக்கப்பட்ட பொலிஸார் ஆயுதம் ஏந்தியவாறு தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. புலிகளின் போரில் அது மிகவும் உக்கிரமானது. அப்படியொரு வாய்ப்பு மீண்டும் தற்போதைய போராட்டங்களில் காணப்பட்டது.





முதல் தடவையாக 4 பெண் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது

1971 ஆம் ஆண்டில், அரசாங்கத்துக்கு எதிரான கலகக் குழுக்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சியில் முதலில் பொலிஸாரையே தாக்கின

1867 ஆம் ஆண்டளவில், பொலிஸ் தலைமையகம் மருதானையில் உள்ள பள்ளிவாசலுக்கு அருகில் அமைந்திருந்தது

கொழும்பில் இருந்த 39,000 பேருக்கு 165 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய பொலிஸ் குழுவொன்று கடமையாற்றியிருந்தது

பொலிஸ் அதிகாரிகளின் ஊக்கத்தை பாதிக்கும் இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், ஊதியம் மற்றும் கொடுப்பனவுகளில் ஏற்படும் மாற்றங்கள் அரசாங்கத்துக்கு அரசாங்கத்திற்கு மாறுபடும். அதற்கான நீண்ட கால திட்டம் எதுவும் இல்லை. பொலிஸ் துறை அரசியல்மயமாக்கப்பட்டது என்று முத்திரை குத்துவதற்கு இது ஒரு வலுவான காரணமாகும்.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன பொலிஸாரை மறுசீரமைக்கும் செயற்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி தற்போது அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, பொலிஸ் நிர்வாகத்தில் புதிய கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய கட்டமைப்பின் படி, பிராந்திய பொலிஸ் பிரிவுகளின் எண்ணிக்கை 45 ஆகவும், செயல்பாட்டு பொலிஸ் பிரிவுகளின் எண்ணிக்கை 77 ஆகவும் திருத்தப்பட்டு, பொலிஸ் சேவைக்குத் தேவையான அதிகாரிகளின் எண்ணிக்கை 107,000 ஆக மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, பல்வேறு பிரிவுகள் மற்றும் பொலிஸ் பணிகளும், பொலிஸ் நிர்வாகத்துக்கு ஒதுக்கப்பட்ட வரம்புகளும் புதிய தோற்றம் பெற்றன.

குற்றவியல் புலனாய்வு திணைக்களம்

இத்திட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் 05 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இதன்படி, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் தன்மை மற்றும் விசாரணைக் கோப்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. 05 பணிப்பாளர்களின் கீழ் புதிய பிரிவுகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட பிரிவுகள் பின்வருமாறு,

1. சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவு
2. சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவு
3. நிதி மற்றும் வணிக குற்ற விசாரணைப் பிரிவு
4. மனித கடத்தல், கடத்தல் மற்றும் கடல்சார் குற்ற விசாரணை பிரிவு
5. கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு.

ஓகஸ்ட் 1, 2022 வரையான காலப்பகுதியில் பணியில் இருக்கும் பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை சுமார் 96563ஆகும். இந்த அதிகாரிகளின் தனிப்பட்ட விவரக் கோப்புகளைப் பராமரிக்கும் கடமை மிகவும் கடினமாக இருந்ததுடன், பல ஆண்டுகளாக அதிகாரிகள் தயாரித்த தகவல் கோப்புகளை கணினி அமைப்பில் உள்ளிடுவதற்கு பல வசதிகளுடன் கூடிய பணியாளர் மேலாண்மை தகவல் அமைப்பு (P.M.I.S) நிறுவப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளுக்கு நீண்ட காலமாக பதவி உயர்வு வழங்கப்படாமல் இருந்த பிரச்சனைக்கு தீர்வாக பதவி உயர்வுகளை செயல்படுத்தப்பட்டன. அதன்படி, ஜனவரி 01, 2019, ஜூலை 01, 2019, ஜனவரி 01, 2020 மற்றும் பிப்ரவரி 08, 2020 ஆகிய திகதிகளில் பல்வேறு பதவிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 31541 பொலிஸ் அதிகாரிகள். பதவி உயர்வு பெற்றனர். இதேவேளை, உதவி சேவையில் 927 பேரும், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 490 அதிகாரிகளும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொலிஸ் நிலையங்கள், பிரிவுகள் மற்றும் எல்லைகளுக்கு பொறுப்பான அதிகாரிகளாகும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும், வரலாற்றில் முதல் தடவையாக 04 பெண் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு பொலிஸ் மா அதிபர் பதவிக்கு வருவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தற்போது 04 பெண் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், 04 பெண் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 13 பெண் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், 1149 பொலிஸ் பரிசோதகர்கள், 9464 பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் தரத்திலான பெண் உத்தியோகத்தர்கள் அனைத்துப் பகுதிகளிலும் கடமையாற்றி வருகின்றனர்.

ஆண் அதிகாரிகளுடன் இணைந்து வியக்கத்தக்க வகையில் கடமைகளைச் செய்யும் பெண் உத்தியோகத்தர்கள் நல்ல மன நிலையில் கடமைகளைச் செய்வதற்குத் தேவையான உள்கட்டமைப்புகள் நாடு முழுவதும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இன்று வரை பொலிஸ் கடமையில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை சுமார் 3039 ஆகும். அவர்களில் 2598 பேர் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதச் செயல்களால் உயிரிழந்த துணிச்சலான அதிகாரிகள் மற்றும் அங்கவீனமான அதிகாரிகளின் எண்ணிக்கை 1571 ஆகும். சாதாரண காவல் பணியின் போதும் பிறரின் உடமைகளையும் உயிரையும் காக்க உயிரை தியாகம் செய்த பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 441 ஆகும்.

சமூகம் தவறு செய்யும் போது பெலிஸாரின் தேவையை மக்களே உணருவார்கள். பொலிஸாரையும் மக்களையும் பிரித்து வைத்திருக்கும் சமூகத்தில் அல்ல, நாம் அனைவரும் சமம் என்று நினைக்கும் ஒரு சுதந்திர நாளில், பூமியில் ஒருவரையொருவர் மனிதர்களாக மதிக்கிறோம். எப்போதும் அனைவரின் நலனுக்காகவும் பாடுபடும் ஒரு பொலிஸ் அதிகாரியின் இறுதி ஆசை, மக்களின் வாயில் இருந்து பொலிஸ் சேவைக்கான பொன்னான வார்த்தைகளையும் ஆசிகளையும் காண வேண்டும்.

பாகிஸ்தான்

பாகிஸ்தானைப் பதம்பார்த்த பேய்மழை;

3 கோடி மக்கள் பாதிப்பு

பாகிஸ்தானில் அண்மைக்காலமாகப் பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் நாட்டின் பல நகரங்களும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது. குறிப்பாக நாட்டின் மொத்தமாக உள்ள நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு நீரில் மூழ்கடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் இதுவரை 3 கோடி மக்கள் பாதிப்படைந்து இருப்பதாகவும், 10 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது வரை 1,162 பேர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சீனா



விண்வெளியில் விளைவித்த அரிசி

சாதனை படைத்த சீனா

விண்வெளியின் சுற்றுவட்ட பாதையில் நிரந்தர விண்வெளி நிலையம் அமைக்கும் பணியில் சீனா தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் கடந்த வருடத்தில் இருந்தே விண்வெளியில் தாவரங்களை வளர்ப்பது தொடர்பான ஆய்வில் சீனா ஈடுபட்டு வருகின்றது.

அந்தவகையில் வென்சியன் என்ற ஆய்வகத்தில் விஞ்ஞானிகள் பூஜ்ஜியம் புவியீர்ப்பு விசையில் தாலே கிரேஸ் என்ற முட்டைக்கோஸ் வகையைச் சேர்ந்த செடியையும், அரிசி வகையைச் சேர்ந்த செடியையும் பயிரிட்டுள்ளனர்.

கியூபா

‘கமீலோ சேகுவாரா’ காலமானார்

உலகளவில் புரட்சிக்கும், தியாகத்திற்கும் உதாரணமாக திகழ்ந்தவர் சேகுவாரா.

கியூபாவை சேர்ந்த இவர் புரட்சியாளர், மருத்துவர், அரசியல்வாதி, இலக்கிய வாதி என பன்முகத் தன்மை கொண்டவர்.

இந்நிலையில் அவரது இளைய மகனான கமீலோ சேகுவாரா(camilo guevara) வெனிசூலாவின் சராகவ் நகருக்குச் சென்றிருந்த போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளமை அந்நாட்டு மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீலோ சேகுவாரா, சேகுவாரா ஆய்வு மையத்தின் இயக்குனராக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கமீலோசேகுவாராவின் மறைவிற்கு கியூபாவின் ஜனாதிபதி டயஸ் கேனல் ” ஆழ்ந்த வலியுடன், சேவின் மகனும் அவரது சிந்தனைகளை ஊக்குவிப்பவருமான கமிலோவிடம் நாங்கள் விடைபெறுகிறோம்” என இரங்கல் தெரிவித்து டுவிட்டர் பதிவு வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா

இனி ‘சினூக்கைப்’ பயன்படுத்த மாட்டோம்

அமெரிக்க இராணுவம் திடீர் அறிவிப்பு

சினூக் ரக ஹெலிகொப்டர்களை பயன்படுத்துவதை அமெரிக்க இராணுவம் நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

சினூக் ஹெலிகொப்டர்களில் என்ஜின் அடிக்கடித் தீப்பிடிப்பதனாலேயே அமெரிக்க இராணுமானது இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவத்தில் மொத்தம் 400சினூக் ஹெலிகொப்டர்களானது பயன்பாட்டில் உள்ளது. அத்துடன் இந்திய விமானப்படையில் 15 சினூக் ஹெலிகொப்டர்கள் இப்போது பயன்பாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒட்டு மொத்தமாக அனைத்து சினூக் ஹெலிகாப்டர்களையும் நிறுத்துவதற்கான முழு விபரங்களை அமெரிக்கவிடம் இந்திய தரப்பில் விளக்கம் கேட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா கொடுக்கும் விளக்கத்திற்கு பின், இந்திய விமானப்படையும் சினூக்ஹெலிகொப்டர் பயன்பாட்டை நிறுத்துவது தொடர்பாக முடிவெடுக்க வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

தரையில் கால் பட்டாலே மயங்கி விழும் பெண்

பிரித்தானியாவில் ஒரு நாளைக்கு சுமார் 23 மணி நேரம் வரை கட்டிலிலேயே இளம்பெண்ணொருவர் கழித்து வருவது பலரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளது.

பிரித்தானியாவில் பாங்கோர் (Bangor) என்னும் பகுதியைச் சேர்ந்தவர் Lyndsi Johnson. 28 வயதான இவர் Postural Tachycardia என்னும் அரிய வகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதன் காரணமாக அவர் உட்காரும் போதோ அல்லது நிற்கும் போதோ கால் கீழே படும் சமயத்தில், அவரது இதய துடிப்பு அசாதாரண நிலைக்கு செல்லும் என தகவல்கள் தெரிவிக்கின்றது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர் “எனக்கு புவி ஈர்ப்பு என்றால் ஒருவித ஒவ்வாமை இருக்கிறது. இது கேட்பதற்கு சற்று வித்தியாசமாக தோன்றலாம். ஆனால் அது தான் உண்மை. என்னால் மூன்று நிமிடத்திற்கு மேல் எழுந்து நிற்க முடியாது. அப்படி நின்றால் மயக்கமோ அல்லது உடல்நிலை சரி இல்லாமலோ ஆகி விடும். கடந்த 2015 ஆம் ஆண்டே எனக்கு இவ்வாறான நோய் இருப்பது தெரிய வந்தது. இதனையடுத்து 2018 ஆம் ஆண்டளவில் எனது நிலை மேலும் கவலைக்கிடமானது. தற்போது நான் படுத்து கிடக்கும் போது மட்டும் தான் மிகவும் நன்றாக உணர்கிறேன். இதனால் நாள் முழுவதும், அதாவது 23 மணி நேரம் வரை நான் படுக்கையில் தான் இருக்கிறேன்” எனக் கூறியுள்ளார்.

மேலும் கால் மேல் கால் போட்டு இருந்த நிலையில் தான், உணவு அருந்தவும் குளிக்கவும் என்னால் முடிகிறது” எனத் தெரிவித்துள்ளார்.

இத்தாலி

வெனிஸ் திரைப்பட விழாவில் ஜெலென்ஸ்கி

இத்தாலியில் 79ஆவது ஆண்டு வெனிஸ் திரைப்பட விழா, கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. .

இவ்விழாவின் தொடக்க நிகழ்வின் போது காணொலி மூலம் உரையாற்றிய உக்ரேன் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி “உக்ரேனில் நடந்த போரை மறந்துவிடாதீர்கள்.

தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் உக்ரேனில் இறக்கின்றனர். அவர்கள் இனி மேல் எழுந்திருக்கப்



போவதில்லை.சினிமா அமைதியாக இருக்குமா, அல்லது அதைப் பற்றிப் பேசுமா? நம் காலத்தில் சினிமா அமைதியாக இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில் புதிய சாப்ளின்கள் தேவை” என்றார்.என்றார்.

இந்நிகழ்வின் போது உக்ரேன் மீதான ரஷ்யாவின் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களின் பெயர்களும் திரையில் ஒளிபரப்பப்பட்டன.

முன்னதாக கடந்த மே மாதம் நடைபெற்ற கேன்ஸ் திரைப்பட விழாவிலும் செலென்ஸ்கி ஒரு எழுச்சி வாய்ந்த உரையை நிகழ்த்தினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆசியக் கிண்ணம்:

இந்தியாவும் சுப்பர் 4-க்குள் நுழைந்தது

ஆசியக் கிண்ணத் தொடரின் சுப்பர் 4 சுற்றுக்குள் நடப்புச் சம்பியன்களான இந்தியாவும் நுழைந்தது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஹொங் கொங்குடனான குழு ஏ போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே சுப்பர் 4-க்குள் இந்தியா நுழைந்துள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஹொங் கொங்கின் அணித்தலைவர் நிஸகட் கான், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். இந்தியா சார்பாக கடந்த போட்டியில் விளையாடிய ஹர்டிக் பாண்டியாவுக்கு ஓய்வளிக்கப்பட்டு அவருக்குப் பதிலாக நிஷப் பண்ட் அணியில் இடம்பெற்றிருந்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நிதானமான ஆரம்பத்தைப் பெற்ற நிலையில் 21 (13) ஓட்டங்களுடன் அணித்தலைவர் றோஹித் ஷர்மா வீழ்ந்தார். பின்னர் மெதுவாகத் துடுப்பெடுத்தாடிய லோகேஷ் ராகுலும் 36 (39) வீழ்ந்தபோதும், சூரியகுமார் யாதவ்வின் ஆட்டமிழக்காத 68 (26), விராட் கோலியின் ஆட்டமிழக்காத 59 (44) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 192 ஓட்டங்களை இந்தியா பெற்றது. பந்துவீச்சில், அயுஷ் ஷுக்லா 1/29 [4], எஹஸன் கான் 0/26 [4], யசிம் முர்டஸா 0/27 [4] என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 193 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஹொங் கொங் சார்பாக பாபர் ஹயாட் 41 (35), கிஞ்சிட் ஷா 30 (28), ஸீஷன் அலி ஆட்டமிழக்காமல் 26 (17), ஸ்கொட் மக்கெச்னி ஆட்டமிழக்காமல் 16 (08) ஓட்டங்களைப் பெற்றபோதும் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களையே பெற்ற அவ்வணி 40 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், இரவீந்திர ஜடேஜா 1/15 [4], புவ்னேஷ்வர் குமார் 1/15 [4], யுஸ்வேந்திர சஹால் 0/18 [4], விராட் கோலி 0/6 [1] என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவானார்.

இந்நிலையில், ஷார்ஜாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பாகிஸ்தானை ஹொங் கொங் எதிர்கொள்ளவுள்ளது. இக்குழுவிலிருந்து இப்போட்டியில் வெற்றி பெறும் அணியே இந்தியாவுக்கு அடுத்ததாக சுப்பர் 4க்குத் தகுதி பெறும்.

ஐ. அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர்:

வெளியேற்றப்பட்ட கொன்டாவெய்ட், சக்கரி, அலியஸ்ஸின்

ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான அனெட் கொன்டாவெய்ட், மூன்றாம் நிலை வீராங்கனையான மரியா சக்கரி, எட்டாம் நிலை வீரரான பீலிக்ஸ் ஆகர் அலியஸ்ஸின் ஆகியோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நடைபெற்ற தனது இரண்டாவது சுற்றுப் போட்டியில் 6-7 (4-7), 6-2, 2-6 என்ற செட் கணக்கில் ஐக்கிய அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸிடம் தோல்வியடைந்தே தொடரிலிருந்து எஸ்தோனியாவின் கொன்டாவெய்ட் வெளியேறியிருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனது இரண்டாவது சுற்றுப் போட்டியில் சீனாவின் வாங்க் ஸியுவை எதிர்கொண்ட கிரேக்கத்தின் மரியா சக்கரி 6-3, 5-7, 5-7 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், நேற்று அதிகாலை நடைபெற்ற பிரித்தானியாவின் ஜக் ட்ரப்பருடனான இரண்டாவது சுற்றுப் போட்டியில் 4-6, 4-6, 4-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்தே கனடாவின் பீலிக்ஸ் அகர் அலியஸ்ஸின் தொடரிலிருந்து வெளியேறினார்.



பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

மூன்றாமிடத்துக்கு முன்னேறிய ரஷீட் கான்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு ஆப்கானிஸ்தானின் சுழற்பந்துவீச்சாளர் ரஷீட் கான் முன்னேறியுள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான ஆசியக் கிண்ணப் போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையைத் தொடர்ந்தே ஐந்தாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை கான் அடைந்துள்ளார்.

இதேவேளை குறித்த போட்டியில் 3 விக்கெட்டுகளையும், இலங்கைக்கெதிரான ஆசியக் கிண்ணப் போட்டியில் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றிய ஆப்கானிஸ்தானின் முஜீப் உர் ரஹ்மான், 16ஆம் இடத்திலிருந்து ஏழு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜொஷ் ஹேசில்வூட், 2. தப்ரையாஸ் ஷம்சி, 3. ரஷீட் கான், 4. அடில் ரஷீட், 5. அடம் ஸாம்பா, 6. வனிடு ஹஸரங்க, 7. அகீல் ஹொஸைன், 8. புவ்னேஷ்வர் குமார், 9. முஜீப் உர் ரஹ்மான், 10. மிற்செல் சான்ட்னெர்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. மொஹமட் றிஸ்வான், 3. சூரியகுமார் யாதவ், 4. ஏய்டன் மார்க்ரம், 5. டேவிட் மலான், 6. ஆரோன் பின்ஞ், 7. டெவோன் கொன்வே, 8. முஹமட் வசீம், 9. பதும் நிஸங்க, 10. றீஸா ஹெண்ட்றிக்ஸ்.

முதல் ஐந்து சகலதுறை வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மொஹமட் நபி, 2. ஷகிப் அல் ஹஸன், 3. மொயின் அலி, 4. கிளென் மக்ஸ்வெல், 5. ஹர்டிக் பாண்டியா.

இந்நிலையில், தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 103 ஓட்டங்களைப் பெற்றதுடன், 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்கள் பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. பென் ஸ்டோக்ஸ், 3. இரவிச்சந்திரன் அஷ்வின், 4. ஷகிப் அல் ஹஸன், 5. ஜேஸன் ஹோல்டர்.

இதேவேளை குறித்த டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன், ஆறாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகீன் ஷா அஃப்ரிடி, 4. ஜஸ்பிரிட் பும்ரா, 5. ஜேம்ஸ் அன்டர்சன், 6. ககிஸோ றபாடா, 7. கைல் ஜேமிஸன், 8. கேமார் றோச், 9. நீல் வக்னர், 10. மிற்செல் ஸ்டார்க்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜோ றூட், 2. மர்னுஸ் லபுஷைன், 3. பாபர் அஸாம், 4. ஸ்டீவ் ஸ்மித், 5. றிஷப் பண்ட், 6. கேன் வில்லியம்ஸன், 7. உஸ்மான் கவாஜா, 8. திமுத் கருணாரத்ன, 9. றோஹித் ஷர்மா, 10. ஜொனி பெயார்ஸ்டோ.

உலகக் கிண்ணத்துக்கான

அவுஸ்திரேலியக் குழாமில் டிம் டேவிட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 உலகக் கிண்ணத் தொடருக்கான, அவுஸ்திரேலியாவின் குழாமில் டிம் டேவிட் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, இந்தியாவுக்கான மூன்று இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகள் கொண்ட சுற்றுப்பயணத்திலும் 26 வயதான டேவிட் இடம்பெற்றுள்ளார். இதில் டேவிட் வோர்னரின் பணிச்சுமை காரணமாக அவர் இடம்பெறாததுடன் அவருக்குப் பதிலாக கமரொன் கிறீன் இடம்பெற்றுள்ளார்.

சிங்கப்பூரில் பிறந்த டேவிட், அவுஸ்திரேலியக் குழாமில் இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

குழாம்: ஆரோன் பின்ஞ் (அணித்தலைவர்), கிளென் மக்ஸ்வெல், அடம் ஸாம்பா,



டேவிட் வோர்னர், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், மிற்செல் ஸ்டார்க், மிற்செல் மார்ஷ், மத்தியூ வேட் (விக்கெட் காப்பாளர்), பற் கமின்ஸ், ஜொஷ் இங்லிஸ் (விக்கெட் காப்பாளர்), டிம் டேவிட், ஜொஷ் ஹேசில்வூட், ஸ்டீவன் ஸ்மித், அஸ்தன் அகர், கேன் றிச்சர்ட்ஸன்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 02 செப்டெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.